
www.tamilarangam.net

# தூண்டில்



ISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 6

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# impressum

SÜDASIEN

ZEITSCHRIFT DES SÜDASIENBÜRO

Hrsg.: Südasien-Büro e.V.
Kiefernstr. 45
5600 Wuppertal 2
Tel.: 0202/507156
Bürozeiten: Mo - Fr: 9 - 17

**Jahresabo:**

Jahresabonnement (8 Nummern) im Inland DM 36,--, europäisches Ausland DM 4o,--

**Konto:**

Stadtsparkasse Wuppertal, Kto: 268540, BLZ 33o 5oo oo

Mitglieder des Südasien-Büro erhalten außer 'Süd-Asien' und allen Dokumentationen auch regelmäßig 'Kurzinformationen' (ca. alle 2 Wochen) zu aktuellen Ereignissen (Presseschau).

Der Mitgliedsbeitrag beträgt:
* für Studenten/Erwerbslose/ Asylbewerber .................... DM 5,--
* erwerbstätige Personen ......... DM 1o,--
* Gruppen/Institutionen .......... DM 3o,--

monatlich.

Weitere Informationen auf Anfrage.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீண் கொண்டாட்டங்கள்

"எமது நாட்டில் எமக்கு உயிராபத்து உள்ளது"
"எமது உறவினர்கள், நண்பர்கள் கொலைசெய்யப்பட்டு விட்டார்கள்." "சொத்துக்கள் அநியாயமாக அழிந்துவிட்டன." "எந்த உதவிகளும் இல்லாமல் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவே இங்கு தப்பியோடிவந்தோம்."

மேலேயுள்ள வாக்கியங்களில் பல ஏதோ ஒரு வடிவத்தில் மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியவர்களின் விண்ணப்பங்களிலே இடம்பெற்றுள்ளன. விண்ணப்பத்தை அதிகாரிகளிடம் கொடுக்கும் வரைதான் பலரிடம் துயரம் இருக்கும். விண்ணப்பத்தை ஒப்படைத்ததும் துயரமும் பறந்துவிடும். பின்னர் கதையே தலைகீழாகமாறிவிடும். அரசியற் தஞ்சம் கோரியவரிடம் பல அடுக்குகளில் டெக் செற்றுகள், கலர் ரீ.விகள் வீடியோ டெக்குகள், வீடியோக் கமராக்கள், கார்கள் என்று ஒவ்வொன்றாகச் சேர்ந்துவிடும். இதுமட்டுமா? கொண்டாட்டங்கள் என்ன? கோலாகலங்கள் என்ன? கும்மாளமென்ன?

மனச்சாட்சியைத் துரத்தியடிக்கும் இப்படியான செயல்களை எம்மவர்கள் ஏன் செய்கிறார்கள் என்பதைவிட தாய்நாட்டில் இரத்தத்தால் எழுதப்படும் கண்ணீர்க் கதைகள் தொடர்ந்துகொண்டிருக்கையில் இப்படி நடந்துகொள்ள எப்படி மனம்வருகிறது என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. ஜன்னலில் கறுப்புக் கொடியைத் தொங்கவிட்டு மூலையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருங்கள் என்று நாம் சொல்லவில்லை. அநாவசியமான, அசிங்கமான ஆடம்பரமான கொண்டாட்டங்கள் கேளிக்கைகளைத்தான் தவிர்க்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

கொண்டாட்டங்கள் என்றால் கலை இலக்கிய விழாக்களல்ல. இப்போதெல்லாம் மேற்கு நாடுகளில் எங்களில் பலரால் கொண்டாடப்பட்டுவரும் திருமணக் கொண்டாட்டங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், போன்றவற்றைத்தான் குறிப்பிடுகின்றோம். இந்தக் கொண்டாட்டங்களில் இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால் எங்களின் பரிதாபக் கதைகளை அழக்கேட்டு வருத்தப்பட்டுக் கொள்ளும் மேற்கு நாட்டவர்களும் இந்த விழாக்களுக்கு அழைக்கப்பட்டு தமிழ் அகதிகளின் ஆடம்பரங்களால் அதிசயிக்க வைக்கப்படுகிறார்கள். இவர்களை விருந்தினராக அழைப்பதன் பிரதான காரணம் பதிவுசெய்யப்படும் வீடியோ நாடாவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெள்ளைத் தோல்களும் இடம்பெற வேண்டுமென்பதே. அப்போதுதானே ஊருக்குப் போனபின் பெருமையாகப் பீற்றிக்கொள்ளலாம். கொண்டாட்டங்கள் முடிந்ததும் மறுபடியும் சோகக்கதை தொடரும். தற்காலிகமாக தங்கவந்த நாட்டில் எங்களை வேடிக்கைப் பொருட்களாக்கும் இப்படியான கொண்டாட்டங்கள் தேவைதானா?

பாரிசில் அல்லது சிங்கப்பூரில் சிலவேளைகளில் இந்தியாவில்கூட திருமண அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டு இங்கு தருவிக்கப்படுகின்றன. இதற்கே ஆயிரத்திற்குமேல் செலவழிக்கப்படுகிறது. பளபளப்பான அழைப்பிதழ்கள் ஒவ்வொரு நகரத்திற்கும் பறக்கின்றன. ஏனெனில் வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தால்தானே வரவும் அதிகரிக்கும். தூர இடத்திலிருந்து வருபவர்களுக்காக பிரத்தியேக வாகன வசதிகள் செய்யப்படுகின்றன. இதற்கும் ஒரு தொகை. திருமணக்கொண்டாட்டத்திற்காக றெஸ்ரோறன்டுகள், பிரத்தியேக மண்டபங்கள் வாடகைக்கு எடுக்கப்படுகின்றன. இதற்கும் ஒரு தொகை. ஒருநாள் விழாவுக்காக கண்கவர் அலங்காரங்கள் பகட்டான முறையில் செய்யப்படுகின்றன. மணவறைகள்கூட ஏதோவொரு விமானத்தில் மேற்கு நாடுகளுக்கு வந்துவிட்டன. இந்தடிக் கொண்டுக ஒலிபெருக்கிப் பெட்டிகள் அடுக்கப்படும். அவற்றில் உள்ளர்த்தம் புரியாமல் ஆங்கிலப் பாடல்கள் ஒலிபரப்பப்படும்.

மூன்று மணித்தியாலங்களுக்குக் குறைந்துவிடக்கூடாதே என்ற கவலையில் குளியலறையில் மணமகளுக்குத் தலையில் தண்ணீர் வார்க்கும் போதே வீடியோப் படப்பிடிப்பு ஆரம்பமாகிவிடும். மேலத்தேய முறைப்படி மணமகன் நாகரீக உடையில் அமர்ந்திருக்க மணமகள்மட்டும் காலிலிருந்து தலைவரை முகம் உட்பட மூடிமறைக்கப்பட்டு நகைகளின் பாரத்தையும் சுமந்துகொண்டிருப்பாள். மணப்பந்தலிலிருக்கும் அந்த நேரத்திலேயே இருவருக்கும் ஏனிந்த வேறுபாடு என்று கேட்டால் "தமிழ்க் கலாச்சாரம்" என்று பதில்வரும். இந்துக்களின் திருமணமென்றால் கடமைக்குப் புரோகிதர் அமர்த்தப்பட்டு ஆரவாரங்களுக்கிடையே புரியாத மொழியில் ஏதோ செய்து கொண்டிருப்பார்.

திருமணச்சடங்குகள் எதிலும் சம்பந்தப்படாமல் பந்தியை எதிர்பார்த்து விருந்தினர்கள் அரட்டையடித்துக் கொண்டிருப்பார்கள். வார்ப்புதினங்கள் தொடக்கம் பவுண்விலைவரை அளவளாவுவார்கள். விடுதலை இயக்கங்களின் குறைநிறைகளை காரசாரமாக விவாதிப்பார்கள். மணமக்கள் உடைகளை மாற்றிக்கொண்டு வந்து மணவறையின் முன் பேசாமல் நிற்க அந்த அர்த்தத்தைப் புரிந்துகொண்டு தமது தகுதியை தெரியப்படுத்துவதாகக் கருதிக்கொள்ளும் பெரிய அளவிலான அன்பளிப்புகளைக் கொடுக்க ஆரம்பிக்கிறார்கள். "இப்போது கொடுப்பதை எப்போது வாங்குவேனோ"? கையிலே காசில்லாத நேரத்தில் இப்படியொரு தண்டம், "அவனுக்கென்ன கலியாணமும் ஆச்சு. பொருளுமாச்சு". நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுத்துக் கொடுத்தே அழிந்து போனேன்!"என்பனபோன்ற ஆசீர்வாத ங்களுடன் மணமக்கள் பரிசுப் பொருட்களை சந்தோசமாக அடுக்கிவைக்கி றார்கள். இதன்பின்னர் போத்தல்கள் திறக்கப்பட்டு இரண்டாம் பகுதி ஆரம் பமாகிவிடும்.

மணமேடையிலேயே மணமகள் உயிரோ, மணமகள் உயிரோ பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பரிதாபம் தாய் நாட்டில்." மணமுடித்த சில நிமிடங்களிலேயோ, சில தினங்களிலேயோ துணையை இழக்கும் சோடிகளின் கண்ணீர்க் கதைகள், தாத்தா தொடக்கம் பேத்திவரை பூண்டோடு குடும்பங்கள் அழிக்கப்படும் பயங்கரங்கள் என்பன தாய்நாட்டில் அன்றாட நிகழ்ச்சியாக இருக்கையில் அரசியற் தஞ்சம் கோரியுள்ள இடங் களிலே இப்படியான திருமணக் கொண்டாட்டங்கள் அவசியம்தானா? இப்படி யான ஆடம்பரக் கேளிக்கைகள், கேவலங்கள் இல்லாமல் தம்பதிகளால் சந்தோசமாக இருக்க முடியாதா? இங்கு பகட்டுக்கும், டாம்பீகத்திற்கும் எந்தவிதமான பிரயோசனமும் இல்லாமல் நடாத்தும் திருமணக் கொண்டா ட்டங்களுக்குச் செலவழிக்கும் பணத்தை தாய்நாட்டில் துணையை இழந்தோ அல்லது வேறு வழியிலோ அநாதரவாக நிற்பவர்களின் பசி பட்டினியைப் போக்க அனுப்பி வைக்கக்கூடாதா? இந்த உதவியைப் பெற்றுக்கொள்ளும் அந்த ஜீவன்களின் வாழ்த்து இங்கே தம்பதிகளுக்கு திருப்தியைத் தராதா?

குழந்தையை எந்தவித அபிப்பிராயமும் கேட் காமலேயே பெற்றோர்களால் தங்களது விருப்பப்படி பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது. இங்கும் திருமணவிழாக்களைப் போலவே பிரதான இடத்தைப் பிடிப்பது வீடியோதான். வீடியோவுக்காக குழந்தை பலாத் காரமாகப் போஸ் கொடுக்கவைக்கப்படுகிறது. வீடியோக்கமராவுக்காக ஏற்படுத்தப்பட்ட வெப்பம் ஒருபுறம். புகைமன்னர்களின் சிகரெட்டினால் ஏற்படும் புகை ஒருபுறம். மண்டபம் நிறைந்த விருந்தினர்களின் மூச்சுக்காற்று ஒருபுறம். இத்தனைக்கும் நடுவிலிருந்து மூச்சுத்திணறும் குழந்தையை பெற்றோர்களே கவனிக்காதபோது வேறு யார் கவனிப்பார்கள்? போதாமைக்குக் காதைச் செவிடாக்கும் பாடல்கள். உண்மையிலேயே இந்தக் கொடுமைகள் எல்லாம் குழந்தையின் சந்தோசத்திற்காகவா? தமது ஆடம்பரத்தையும், பகட்டையும் காட்டுவதற்காகவும், கொடுத்தவற்றைத் திருப்பி வாங்குவதற்காகவுமே பெற்றோர்களால் நடாத்தப்படும் இந்தக் கொண்டாட்டத்தை குழந்தைகளால் கண்டிக்க முடியாமலிருப்பதே பரிதாபம். வரும் விருந்தினர்களால் குழந்தைகளும் வழக்கமான முறையில் ஆசீர்வதிக்கப் படுகின்றன. விழாவில் பாவிக்கப்படும் தண்ணீவகைகள் குழந்தைகளுடன்என்ன வகையில் சம்பந்தப்பட்டுள்ளன என்று பெற்றோர்கள் சொல்வார்களா?

தாய்நாட்டில் எத்தனையோ குழந்தைகள் காட்டுமிராண்டித்தனமாக அழிக்கப்படுகின்றன. பெற்றோர்கள் கொல்லப் பட்டு குழந்தைகள் அநாதரவாக்கப்படுகின்றன. இந்த நிலை அங்கே

www.tamilarangam.net

இருக்கையில் இங்கே இப்படியான ஆடம்பரமான பிறந்தநாள் கொண்டாட்டங்கள் அவசியம்தானா? இப்படியான கொண்டாட்டங்களுக்கு அநியாயமாக இறைக்கும் பணத்தை அநாதரவாகவோ, அங்கவீனமாகவோ தாய்நாட்டில் பரிதவித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்காக செலவிடக்கூடாதா? இந்தச் செலவு தான் அனுபவிக்காத கொண்டாட்டத்தைவிட மேலான ஆசீர்வாதங்களை அக்குழந்தைக்குப் பெற்றுத்தராதா? இருபது வயதுக்குமேல் தங்கள் பிறந்தநாளைக் கொண்டாடும் "குழந்தைகளும்" தங்களது மதிப்பினத்தை உணர்ந்து தமது செலவுகளைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

இறந்தவர்களின் ஆத்மசாந்திக்காக என்று சொல்லி செய்யப்படும் காரியங்களும் இப்போது கிட்டத்தட்ட கொண்டாட்டங்களாகவே மாற்றப்பட்டுவிட்டன. ஆடித்து விருந்தினர்களை கூப்பிட்டுவயிறு புடைக்கச் சாப்பிட்டு தண்ணியும் பாவிப்பதால் இறந்தவரின் ஆத்மா சாந்தியடைந்துவிடுமாம். இப்படியான ஒரு வைபவம் மூலமாகத்தான் தங்களது சோகத்தைத் தெரிவிக்கலாமாம். தங்கள் கடமைகளைச் செய்யலாமாம். வெகுவிரைவில் இதற்கும் அழைப்பிதழ்கள் அடிக்கப்படலாம். வீடியோவும் எடுக்கப்படலாம்.

தாய்நாட்டில் அநாதரவாகக்கிடக்கும் பிணங்களை மிருகங்கள் சாப்பிடுகின்றன. மரடங்குச்சட்டங்களில் வீட்டு வளவுகளுக்குள்ளேயும், பாடசாலை வளவுகளிலும் பிணங்கள் புதைக்கப்படுகின்றன. இங்கேயோ அறுசுவை உணவுடன் ஆத்மசாந்தி.

இந்த ரீதியில்தான் "பூப்புனித நீராட்டு விழா", "பெயர்சூட்டுவிழா", போன்ற விழாக்களெல்லாம் கொண்டாடப்படுகின்றன. ஆயிரக்கணக்கில் வீடியோக்களுக்காக செலவழிக்கப்படுகின்றன. வீடியோவுக்கென்றே விழாக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கோமாளித்தனமான இந்தக் கொண்டாட்டங்கள் வீடியோவில் பதிவுசெய்யப்பட்டு தாய்நாட்டிற்கு கவனமாக அனுப்பி வைக்கப்படுகின்றன. மேற்கு நாடுகளில் உள்ளவர்களின் உண்மையான கேவலநிலையைப் புரிந்து கொள்ளாமல் இந்த வீடியோக்களைப் பார்க்கும் தாய்நாட்டில் இருப்பவர்களிடையே அக்கரை பற்றிய ஏக்கங்களும், ஆசைகளும் உண்டாகின்றன. ஏற்படுத்தப்படுகின்றன.

மேற்கு நாட்டவர்கள் மத்தியில் நம்மவர்கள் இப்படியான கொண்டாட்டங்களில் கேவலமாக்கப்படுகிறார்கள். இந்த விழாக்களில் பங்குபற்றும் அல்லது இப்படியான விழாக்கள்பற்றிக் கேள்விப்படும் மேற்கு நாட்டவர்களுக்கு எங்களால் சொல்லப்படும் தாய்நாட்டைப்பற்றிய பரிதாபச் செய்திகள் யாவும் பொய்யாகவே தெரியும். அதன்பின் அவர்களிடையே செய்யப்படும் பிரச்சாரம் எடுபடுமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்களுடைய கொண்டாட்டங்களால் ஏற்படும் பாதிப்புகளை உணர்ந்து கொண்டு இனியாவது வீண் கொண்டாட்டங்களைக் கைவிட வேண்டும். பணமும் நேரமும் ஆக்கபூர்வமாகவே செலவிடப்பட வேண்டும்.



# வாசகர் கடிதங்கள்

சிந்திக்கத்தக்க வளர்ச்சிப் போக்கில் சென்றுகொண்டிருக்கும் தூண்டிலில் கலம் 4லில், எதையோ பிடிக்கப்போய்.... எதையோ... என்பது போல 'தீமைகளின் ஆணிவேர் வரதட்சணை' என்ற கதை அமைந்துள்ளது. கருவை மையமாக வைத்து சரியான போக்கில் எழுதாது வேறு பல நிகழ்வுகளை வித்தியாசமான கோணங்களில் மட்டுமே ஆராய்ந்து, அதையும் திரிபுபடுத்தி முழங்காலுக்கும்...... முடிச்சுப் போட்டு கதையை முடிக்கிறார் இரவற்பகுதிச் சிந்தனையாளர். தயவு செய்து "தூண்டில்" வாசகர்களைத் தொடர்ந்தும் நம்பிக்கையிழக்கச் செய்யமாட்டீர்களென நம்புகின்றேன்.

பிறுக்கல். இளஞ்செழியன்

ரமணியின் அட்டைப்படமும், சீ...தனமே கட்டுரையும், "மாறியது நெஞ்சம்" சிறுகதையும் நம் சமுதாய அமைப்பின் புதிய சிந்தனைகளை தூண்டுவனவாக உள்ளன. காலனித்துவத்திலிருந்து பெயரளவில் விடுபட்டு சிங்கள சோவனிச அரசியல்வாதிகளின் அடக்குமுறையில் வாழும் தமிழினத்தை கலாச்சாரம், மரபு என்ற போர்வையின் கீழ் சீதனம், சாதி என்ற ஒடுக்குமுறைப் பேய்களும் பிடித்துள்ளன. இவற்றையெல்லாம் மிகத் தெளிவாக ஆராய்ந்து ஓர் போராட்டத்தை எடுக்கத் தவறியதே இன்றைய விடுதலைக் குழுக்களின் உதயமாகும். எனவே சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் துடிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு ஓர் தெளிவான பாதையை தூண்டிலும் தூண்ட வேண்டுமென விரும்புகிறேன்.

மேற்கு பேர்லின் சின்னவன்

(தொடர்ச்சி 38 ம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்நியமாதல்

"அன்னியமாதல்" என்ற உளவியலை ஆய்வு செய்த "எரிக்புரோம்" என்ற உளவியலாளர் ஒரு அத்தியாயத்தில் இப்படி எழுதுகிறார். "மனிதன் அகத்தை விளங்கிக் கொள்வதற்கு அவனது வாழ் நிலைகளில் ஏற்படும் தேவை ஆதாரமாக அமைகிறது. ஒரு மனிதனின் தேவைகளின் தன்மையை முழுமையாக ஆய்வு செய்யாது அம்மனிதனின் அகத்தை, அவனது தேவைகளைப் புரிந்து கொள்ள முடியாது. இதைக்கார்ல் மார்க்ஸ்" புறநிலைகளின் தன்மையே சிந்தனையைத் தாண்டிவிடுகிறது என்கிற பொருள்முதல் வாதத்தின் மூலம் தெளிவுபடுத்தினார்.

ஜேர்மனியிலும் மற்றைய ஐரோப்பிய கன்ட நாடுகளிலும் வாழும் தமிழர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ள அவர்கள் வாழுகின்ற புறநிலையைப் புரிந்து ஆய்வு கொள்வது மிக முக்கியமானது. இதனைப் புரிந்து கொள்வதன் மூலமே வெளிநாட்டுத் தமிழர்களின் மனோபாவ மாற்றத்தைப் புரிந்து கொள்ளலாம்.

ஐரோப்பிய நாடுகளில் வதியும் ஈழத்தமிழர்கள் அனைவருமே இலங்கை அரசின் இனப்படுகொலைப் பயங்கரத்தில் இருந்து விடுபட்டுவிட்டனர். இது இவர்களின் புறநிலையை பாரிய அளவில் மாற்றிவிட்டது. இப்புறநிலை மாற்றத்தின் காரணமாகவே ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்களின் சிந்தனை பாரிய அளவில் தமது பொருளாதாரத் தேவைகளின் தீர்வுப் பக்கமாகவும் திரும்பிவிட்டது. ஆனால் இந்தப் புறநிலைகளின் செயற்கை மாற்றம் நிரந்தரமானதா? ஆம் என எண்ணும் தமிழர்கள் அரசியல் தஞ்சம் அங்கிகரிக்கப்பட்டவரும், ஐரோப்பிய நாடுகளில் நிரந்தர வதிவிடவுரிமை பெற்றவருமேயாவர். இவர்கள் தம்மை ஈழத்திலிருந்து அந்நியமாக தற்காலிகமாக வைத்துக் கொள்ளலாம். இவர்களில் சிலரே தம்மை அண்டியுள்ள தமிழ் அகதிகளை மன இறுக்கத்திற்குள்ளாக்கும் செயலில் ஈடுபட்டுள்ளனர். கேலி, கிண்டல், பரிகாசம் இன்னும் பல. மேற்கூறியவர்களின் டாம்பீகமான வாழ்க்கை முறையும் (ஆடம்பரமான திருமண வைபவங்கள், பிறந்ததினக் கொண்டாட்டம், உலக ஆடம்பரங்களான தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ கமிரா, வீடியோ இன்னும் பல) அன்னிய கலாச்சார முறைகளும் ஏனைய தமிழ் அகதிகளுக்கு ஒருவித மாயையை ஏற்படுத்தியுள்ளது. இதன் தாக்கத்தால் தொன்மை மிக்க பண்புடைய கலாச்சார அமைப்பிலிருந்து விடுபட தம்மை ஆளாக்கியுள்ளார்கள். ஐரோப்பிய கலாச்சாரம் ஒரு திறந்த அமைப்பு மட்டுமல்ல, பல ஐரோப்பிய அறிஞர்களால் கண்டிக்கப்பட்ட விவஸ்தையற்ற புற கலாச்சாரம். அகக்கலாச்சாரத்தின் வெளிப்பாடே புற கலாச்சாரத்தின் போக்கு, அல்லது செயல்முறை. ஆக ஐரோப்பிய மக்களின் "மனம்" பலவீனப்பட்டபடியினால் புற கலாச்சாரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீரழிவுபட்டுள்ளது. இவர்களின் மனம் பலவீனப்பட என்ன காரணி ஏதுவாக இருந்தது? இவற்றை முழுமையாக ஆராய்ந்தால் ஒரு நூற்பக்கம் எழுத வேண்டி வரும். எனவே சுருக்கமாக விளக்கி எமது கலாச்சாரத் தொன்மைமிக்க பண்பாட்டை விட்டு விலகுகின்ற இளம் உள்ளங்களுக்கு எம் கலாச்சாரத்தின் நன்மைகளையும் எடுத்துக்காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய சமூக நாடுகள் பண்ட உற்பத்தியை கட்டுப்பாடற்ற அளவில் பெருக்கியது. மனித தேவைகளையும் (வாழ்க்கைக்குத் தேவையற்ற ஆடம்பர சாதனப் பொருட்கள். இவைகள்தான் இன்றைய மனிதனுக்கு அவசிய தேவையாகப் புலப்படுகிறது) எல்லையற்ற விரிவடையச் செய்தது. உற்பத்திக் கருவிகள் வளர்ச்சியடைய வேலைப்பிரிவினை ஏற்பட்டது. உபரி உற்பத்தி வர்க்கப் பிரிவுகளை ஏற்படுத்தியது. நிலப்பிரபுக்களின் கட்டளவான உற்பத்தி யந்திர உற்பத்தியோடு வேகமடைந்தது. உற்பத்திச் சாதனங்கள் இவர்கள் கையில் சிக்கியது. இவர்களது இலாபத்திற்காகவே உற்பத்தி என்றநிலை இதனால் ஏற்பட்டது. மனித உழைப்பை இயந்திரம் முடக்கியதும் உழைக்கும் வர்க்க மக்களின் வயிற்றில் பெரும் அடி விழுந்தது. இதனால் விரக்தியடைந்த உழைக்கும் மக்களை அரசியல் பக்கம் திரும்பவிடாமல் தடுத்து நிறுத்தி வேறு திசைகளில் அவர்களைத் திருப்பிவிட அரச சாதனங்களும் முதலாளித்துவ சாதனங்களும் (பத்திரிகை, தொலைக்காட்சி, இலக்கிய ஏடுகள், வானொலி) முனைந்தன. இவற்றின் வெளிப்பாடுகளே மனத்தைப் பலவீனப்படுத்தும் பாலியல் உணர்ச்சியைத் தூண்டும் விளம்பரங்களும், எழுத்துக்களும், காம களியாட்ட அரங்குகளும், மது உற்பத்தியும், விபச்சார விடுதிகளும் சட்ட ரீதியாக இயங்கவிடப்பட்டன. இவற்றின் பக்கம் திரும்பிய உழைக்கும் மக்களை 'சோசல் கெல்ப்' (சமூக உதவி) கொடுத்து நிரந்தர சோம்பேறிகளாக்கியது மட்டுமல்லாது மதுவிடமும், மாதுவிடமும் தஞ்சமடைய வைத்து வெற்றி கண்டுவிட்டது ஐரோப்பிய நாடுகளின் அரசுகள்.

இவைகளின் வெளிப்பாடுகளே ஐரோப்பிய கீழ்த்தட்டு மக்களின் (உடல் உழைப்பாளிகள்) கைகளில் பியர் புட்டிகளும் சிகரெட்டும், மற்றும் போதை வஸ்துக்களும். இவற்றிற்கு அடிமையாகி செக்ஸ் பார்களில் (நிர்வாண காட்சிச்சாலை) அலைகிறார்கள். இவையாவையும் பார்க்கும் எம் இளம் உள்ளங்களுக்கு இது ஒரு சொர்க்க வாசலாகத் தெரிகிறது.

இதனால் கவரப்பட்டு உழைக்கும் பணத்தை மட்டுமல்ல உழைப்பின்றி சமூக உதவிப்பணத்தைப் பெற்ற இவ்வகையான செக்ஸ் பார்களிலும், ஸ்பீல் மெசின்களிலும் மது பார்களிலும் பணத்தைக் கொட்டிவிட்டு உணவுக்கு வழியின்றித் திண்டாடும் எத்தனை தமிழ் இளைஞர்களை நாம் காண்கிறோம். இவர்களின் இந்தப் போக்கு ஏனையவர்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யும் காலப்போக்கில் அந்நியமாக்கும் எமது பண்பாட்டிலிருந்து. இங்கு இவர்களின் கலாச்சாரச் சீரழிவுக்கு எது காரணமோ அது எமது கலாச்சார பண்பாட்டை தகர்க்கக்கூடிய வழியில் இல்லை. ஆனால் இங்கு வாழும் எம்மவர்களின் புதிய மோகம் கலாச்சார மோதலை விளைவிக்கும் அபாயம் உண்டு.

இலங்கையில் தாய், தந்தையரின் கட்டுப்பாட்டுடனும் எமது பண்பாட்டின் யதார்த்த தன்மையிலும் இவ்வகையான கேளிக்கைகளில் ஈடுபடமுடியாதிருந்த எமது இளைஞர்கள் மேற்கூறியவர்களின் பண்பற்ற போக்கினால் காலக்கிரமத்தில் அந்நியப்படப் போகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்த புறநிலைகளின் மாற்றம் ஏற்பட்டுவருவதை யதார்த்தமாகப் புரிந்துகொண்ட இன்னொருபகுதித் தமிழர்கள் "தாய் நாட்டின் பிரச்சனை முடியும்வரை இங்கு காலம் கடத்தலாம்" என்ற நிலையில் தம்மைவிட்டு அன்னியமாகி பணம் ஒன்றே குறிக்கோள் என்றபடி காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற அனுபவ மொழிக்கொப்ப தம்மை வருத்தி உழைக்கிறார்கள். இவர்கள் தாய்நாட்டின் எந்தப் பிரச்சனையிலும் தலைபோடாது தாம் வேற்று நாட்டவர்கள் என்றநிலைபோல் செயற்படுகிறார்கள். உதாரணமாக எமது பிரச்சனைகளை எடுத்துக்கூறி நாம் பொருளாதார அகதிகள் அல்லஅரசியல் அகதிகள் என்று இங்குள்ளவர்களுக்கு விளங்கும் எந்த நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்வதில்லை. உண்மையில் எம் நிலையை அறிந்த மனித உரிமைக்குக் குரல் கொடுக்கும் காறிற்றாஸ், டேசி குறாப், தி குருனன் (பசுமைக்கட்சி) போன்றவர்களின் கூட்டங்களில் நாம் கலப்பதில்லை. அவர்கள் அழைத்தாலும் நாம் போவதில்லை. இந்தப் போக்கினால் இதுபோன்ற அமைப்பாளர்களும் நாம் பொருளாதார அகதிகள் என்ற நிலைக்கு வரலாம். இதற்கு நாம் இடமளிக்கலாமா? உண்மையில் நாம் அனைவரும் அரசியல் அகதிகள் என்றுவிளக்க முன்வந்து செயற்பட வேண்டும்.

மேற்கூறியவர்களின் இந்தப் போக்கினால் இவர்களின் உழைப்புக்கு நிகராக உழைக்க முடியாமலும், உழைக்கும் சூழ்நிலை அற்றதாலும் பலர் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றாமலும் தம்மைவிட்டு அந்நியமாகிறார்கள். இவர்களிடம் வாழ்வு, செயற் திறன், மனோபாவம், நாடு என்பன அந்நியமாகிவிட்டன. சுருங்கக் கூறின் யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற நிலை.

இன்று மேற்குலக நாடுகளில் வாழும் தமிழ் அகதிகளின் மனதில் பணமொன்றே வாழ்வு என்ற சிந்தனை துளிர்விட ஆரம்பித்து விட்டது. இதனால் நாடு, இனம், பண்பாடு இவை யாவையும் முட்டைகட்டித் தூக்கி வீசிவிட்டு எந்தவகையிலும் பணம் சேர்க்கத் தயங்குவதில்லை. தமிழர்களில் ஒரு சிறுபகுதி இளைஞர் குழுக்களின் போக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனவேதனையைத் தருகிறது. இவர்களின் போக்கை மாற்ற காலம்தான்
பதில் சொல்ல வேண்டும். இத்தகைய பலர் இன்று ஐரோப்பிய நாட்டு
சிறைகளில் காலம் தள்ளுகிறார்கள். இதில்மிக வருத்தமான இன்னொரு விட
யம் எம் குலப் பெண்களும் இதில் அடங்குகிறார்கள் என்பதே. எமது பண்
பாட்டைக் கட்டிக்காக்கும் தாய்மார்கள் இன்று போதைவஸ்து கடத்து
ம் வாகனமாகிவிட்டார்கள்" என்று மேலைநாட்டார் கூறும்போது நாம்
வெட்கித்தலைகுனிய வேண்டியுள்ளது. இவர்களின் போக்கு மிகவும் கவலை
க்குரிய விடயம். நாளை இவர்களின் மனக்கிளர்ச்சி பெரும் தீங்கு பயக்கு
ம் நம் நாட்டிற்கு.

இன்று ஐரோப்பிய நாடுகளில் புறநிலைகள் (வா
ழும் நிலை) உண்மையில் மாற்றமடைகிறதா? ஜேர்மனியில் ஏற்பட்டுவரும்
வேலையில்லாத் திண்டாட்டம், அளவுக்கு மீறிய அந்நிய குடிவரவு, பருவகா
லக் கோளாறு இன்னபல காரணிகளால் பொருளாதார சரிவு ஏற்பட்டு
ள்ளது. இதைக் கண்ணுற்ற நிபுணர்கள் பத்திரிகைகள் வாயிலாக எச்சரித்
துள்ளனர். இதனால் ஜெர்மனியர்களிடம் முன்பு ஏற்பட்டிருந்த மனக்குமுறல்
வெளிப்படையாக எழுச்சி பெற்றுள்ளது. பல முக்கிய நகரங்களில் ஆர்ப்
பாட்ட ஊர்வலங்கள் நடக்க ஆரம்பித்து விட்டன. இதன் தாக்கம் ஜேர்
மன் சமஸ்டி அரசின் ஆளும் கட்சியான சி.டி.யு வை மிகவும் பலவீனப்
படுத்தியுள்ளது. இதன் வெளிப்பாடே முதன்முதலாக ஈழத்தமிழர் வரவை
கட்டுப்படுத்த கிழக்கு ஜேர்மன் அரசுடன் பேச்சுவார்த்தை மூலமாக
பல கோடி டொச் மார்க் கொடுத்து பேர்லின் எல்லை வாயி
லை மூடுதல் ஒப்பந்தம் கைச்சாத்தானது. பின் பல ஈழத்தமிழர்களின்
வரவு மட்டுப் படுத்தப்பட்டது. தற்போது இலங்கை உட்பட ஏனைய நா
ட்டாருக்கும் (அரசியல் அகதிகள்) தஞ்சம் அளிப்பது மட்டுப் படுத்தப்பட்
டுள்ளது. இவர்களில் பலருக்கு ஜேர்மன் அரசால் (டுல்டுங்) சகிப்புத்தன்
மைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இவை அனைத்தும் புற நிலைகளில்
ஏற்பட்டு வரும் அதிமுக்கிய மாற்றமாகும். வெளிநாட்டவருக்கான எதிர்ப்
புகள் சுவிஸ், கொலண்ட், இங்கிலாந்து, பிரான்ஸ், மற்றும் ஏனைய ஐரோப்
பிய நாடுகளில் வெகு வேகமாக பரவி வருகின்றது. இதன் முதற்கட்டமா
க இங்கிலாந்து ஆறு தமிழர்களை நாடு கடத்தியது குறிப்பிடத்தக்கது.

இவை யாவையும் நோக்குமிடத்து ஐரோ
ப்பிய நாடுகளில் வலதுசாரிக் கட்சிகளாயினும், சரி இடதுசாரிகளின் ஆ
ட்சியாலும் சரி வெளிநாட்டவரை வெளியேற்றும் கூட்டு நடவடிக்கையை
எடுக்கக்கூடிய வாய்ப்புகள் மிளிர்கின்றன. இவ்வருட இறுதிக்குள் இவை சா
த்தியப்படலாம். இது சட்டபூர்வமாக எடுக்கக்கூடிய அபாயம் ஒன்று நெ
ருங்கிவருவதை உணரக்கூடியதாக உள்ளது. இந்தப் புறநிலை மாற்றம்
1933 ல் கிட்லர் இங்கு ஏற்படுத்திய நிலைமைக்கு வளர வாய்ப்புண்டா
னால் 5 மில்லியன் யூதர்களுக்கு ஏற்பட்ட நிலைமையை எண்ணிப் பார்க்க

www.tamilarangam.net

வேண்டும். ஜேர்மனியில் "வெளிநாட்டவரே வெளியேறு" போன்ற கோசங்களை அலட்சியப் படுத்துகின்றனர். வெளிநாட்டவர்கள் இந்தப் புறநிலை மாற்றங்களை உணராமல் இருக்கக்கூடியவர்கள், டொச், ஆங்கில மற்றும் ஏனைய நாட்டுப் பத்திரிகைகளை வாசித்து விளங்க திறனற்றவர்கள், தொலைக்காட்சி, வானொலிச் செய்திகளையும் விளங்கிக் கொள்ள முடியாதவர்கள்தான்.

மேற்கு ஐரோப்பாவில் தமிழர்களுக்கு இன்று ஏற்பட்டுவரும் புறநிலை (வாழ்நிலை) மாறி வருகிறது. இம்மாற்றம் பன்மடங்கு வளர வாய்ப்புகள் நிறையவுண்டு. இல்லையென்று சவால் விடுபவர்களின் கண்கள் மலசலகூடங்களின் சுவர் ஓரங்களில் பார்வையைச் செலுத்தினால் சிறிதாவது புரியும். ஆனால் இங்கு போதைப் பொருள் கடத்தி பிடிபட்டுச்சிறைக்குள் முடங்கிக் கிடக்கும் எம் நாட்டின் செல்வங்கள் (இளைஞர்கள்) இதைக்கடத்திப் பிடிபட்டு வாழ்வை இருட்டாக்கியதேன்? முதற்குறிக்கோள் பணம். இரண்டாவது ஆடம்பரமாக வாழவேண்டுமென்ற போக்கு. மூன்றாவது பிடிபட்டுச்சிறைகளில் வாடும் இளைஞர்களே கூறுகிறார்கள். இந்த மூன்றாவதற்கு விடை, சுவிஸ் நாட்டில் ஒருசிறையில் வாழும் இலங்கைத் தமிழரை இலங்கைத் தமிழ்ப் பாதிரியார் ஒருவர் அந்நாட்டு அரசின் அனுமதியுடன் பார்வையிடச் சென்றாராம். சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களைப் பார்த்து இந்தப் பாதிரியார் கேட்டார் நீங்கள் ஏன் போதைவஸ்து கடத்தினீர்கள்? அதற்கு ஒரு இளைஞனின் பதில் எனக்கு ஐந்து பெண் சகோதரிகள். அவர்களை வாழவைக்க வரதட்சணை கொடுக்க வேண்டுமே. அதற்காகத்தான் கடத்தினேன் என்றான். இந்த நபரைப் பார்த்து பாதிரியார் பல விடயங்களை எடுத்துச் சொன்னாராம். சீதனம் கொடுப்பதற்குப் பணம் தேவை. அதற்காக பல உயிர்களைக் குடிக்கும் போதைவஸ்துவைக் கடத்தி பலரை அழித்து உன் சகோதரிகளை வாழவைத்தால் உன் சகோதரிகள் வாழ முடியுமா? என்றெல்லாம் எடுத்துச் சொல்லியும் அந்நபர் இதைப் பொருட்படுத்தவில்லையாம். இதை ஒரு கூட்டத்தில் அந்தப் பாதிரியார் மனவேதனையுடன் சீதனக் கொடுமையைப் பற்றி கவலைப்பட்டார்.

ஆக இந்தச் சீதனக் கொடுமை வாழையடி வாழையாக தன் கோரப் பற்களை இங்கும் (மேற்குலக நாடுகளில்) பதிக்கிறது. நாம் இங்கு வந்தது வாழமுடியாத இலங்கை அரசின் இனவெறிப் படுகொலையால். வந்தும் ஒழுங்காக வாழ முடியவில்லை. எம்மில் புரையோடிப் போன சமூகச் சீரழிவுகளை விடமுடியாமல் இந்நாட்டாரிடமும் அதை எடுத்துக்காட்டி நம்மைக் கேலிக்குள்ளாக்கியது நாமே. ஒரு நகரத்தில் வாழும் இலங்கையர்கள் பத்துப் பேர் கூடி ஒற்றுமையாக வாழத் தெரியவில்லை. (RATHAUS) நகராட்சி மன்றத்தில் தான் அகதிகளுக்கு உணவு, உடைக்கான பணம் கொடுக்கிறார்கள். ஒரு குடும்பத்திற்கு கூடுதலாக ஏதாவது பொருள் கிடைத்தால் பக்கத்து குடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ம்பத்திற்கு அருக்காக. உடனே மறுநாள் முத்தவும் வாசலில் இவர்கள் போய் நிற்பார்கள். இதுதான் தமிழர்களின் மனோபாவமா? என்று ஐரோப்பியன் கேட்கிறன்.

எம்மை முழுவதும் கேவலமாக நடத்தியும் நாம் இங்கு வரதட்சணையைத் தவிர்க்க முடியவில்லையே. பயார்ன்(BAYERN) என்றால் ஒரு தொகை, வெஸ்ற்பாளின் (WESTFALEN) என்றால் ஒரு தொகை கேட்டு கல்யாணப் பேச்சு நடக்கிறது. இப்படிச் சீதனம் வாங்கி கலியாணம் பண்ணும் முதுகெலும்பில்லா இளைஞர்களே உங்களுக்குச் சூடு சொரணை இல்லை? நாட்டில் ஏற்பட்டு வரும் அழிவுகளைப் பார்த்தாவது பணத்தின் மேல் வெறுப்பு வரவில்லை? பத்திரிகைகளிலிருந்து இந்நாற்றத்தைப் பற்றி வரும் செய்திகளைப் பார்த்தது மனம் வேதனையடைகிறது. வரதட்சணைக் கொடுமையைப் போக்குவது இன்றைய இளைஞர்களின் கையில் மட்டுமல்ல வசதி படைத்த தாய், தந்தையரிலும் தங்கியுள்ளது.

இவையனைத்தையும் விட இங்கு (மேற்குநாடுகளில்) வாழும் தமிழ் அகதிகள் குடும்பங்களின் மனநிலை புறநிலைகளில் மனதைப் பறிகொடுத்து தாய் நாட்டு மறப்பு (அந்நியமாதல்) நிலையில் வாழ முற்படுகிறார்கள். இது மிகவும் விபரீதமான விடயம் என்பதை இவர்கள் அவசியம் புரிய வேண்டும். தம் வாழ்வு ஐரோப்பிய நாடுகளில் நிச்சயப் பட்டுவிட்டதாக எண்ணி இங்குள்ள தமிழர், பெற்றோர்கள் தம் சந்ததிக்கு ஐரோப்பிய மொழிகள் கற்றுக் கொடுக்கிறார்கள். ஐரோப்பிய சிதைந்த விவஸ்தையற்ற பண்பாட்டைப் புகுத்துகிறார்கள். இவைகளே கவலைக்குரிய விடயம். தாய் மொழியில் சித்தி இல்லாதவன் பிற மொழியின் தன்மையை புரிய முடியாது. தமிழ் மழலைக்கு தாய் மொழியே புகட்ட வேண்டும். இதனை தமிழர்களான தாய், தந்தையர்களாலேயே புகட்ட முடியும். மாறாக ஐரோப்பிய மொழி புகட்டப்பட்டால் தாய் மொழியுடன் கூடவே புகட்டுங்கள். வாழைப்பழத்துடன் பால் ஊட்டுவதுபோல் தமிழையும் புகட்டுங்கள். இது உங்கள் சந்ததியின் நன்மைக்கே. மாறாக தாய் மொழி அந்நியமாக்கப்பட்டால் குழந்தைகளின் வாழ்வில் பின் விளைவுகள் பாரதூரமானவை. இங்கிருந்து நாடுகடத்தப்படும் மழலைகளின் கல்வி நாசமாக்கப்பட வாய்ப்புகள் பல. உதாரணம் மொழி உலகைப் பற்றிய உணர்வு நிலையை ஏற்படுத்துவதும் ஒழுங்கை நிலைநாட்டுவதும் மொழிதான். மொழியானது சிந்தனையின், மனித உணர்வு நிலையின் பிரதிபலிப்பின் ஓர் அங்கம். மொழி இன்றி சிந்தனை இல்லை. உலக அறிவைப் பெறமுடியாது. சமூக வாழ்வு, பண்பாடு, சட்டதிட்டங்கள் ஆகியவற்றின் வாகனம் மொழியேயாகும்.

குழந்தைப் பருவத்திலிருந்து மொழி ஒலி வடிவாக நினைவில், மனதில் (ஆழ் மனம்) பதிகிறது. மனிதரின் நினைவிலி மனதை (ஆழ்மனதை) கட்டுப்படுத்துவது மொழி. ஆகவே ஒரே மொழியை

www.tamilarangam.net

கிரகித்தவர்கள் ஒரே சமூகமாக, அமைப்பாக வாழ முற்படுகின்றனர். ஏனெனில் அவர்களின் ஆழ் மனம், சிந்தனை, பண்பாடு ஒன்றுக அமைந்திருப்பதே அடிப்படைக் காரணம். ஆனல் இங்கு வாழும் பெற்றேர்கள் தம் மழலைகளுக்குத்தமிழ் போதிக்க அக்கறையெடுக்கவில்லை . தம்மை அறியாமல்இவர்கள் செய்யும் இந்த மகா துரோகம் நாளைய குழந்தையின் வாழ்வை இருண்ட இராச்சியமாக்கும். இலங்கை சென்று தமிழ் கற்கமுடியாது மனக்கிளர்ச்சி ஏற்படும். நினைவிலி மனதில் பதிவுத் தன்மை குறையும். பின் கல்வி கற்றல் மத்திமமாகும். தவிர மூளை வளர்ச்சி குன்றும். மொத்தமாக இதன் தாக்கத்தால் வருங்காலத் தமிழ்ச் சமுதாயத்தில் மூளை வரட்சி ஏற்படும் பெரும் அபாயம் உண்டு.

இன்றிலிருந்தே எமது பண்பாட்டைச் சிதையவிடாமல் காப்போம். நாளைய சமுதாயத்தை நலியவிடாமல் தடுப்போம். என்று ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூணுவோம்.

இவ்விடயங்களை இங்கு வாழும் சராசரித் தமிழ்க் குடும்பங்களுக்குப் புரியவைக்கும் கடமை வெளிநாடுகளிலிருந்து வெளியாகும் தமிழ் ஏடுகளுக்குண்டு. இல்லையேல் அந்நியமாதல்களைத் தடுப்பது சற்றுக் கடினம்.

— ப.வி. ஸ்ரீரங்கன் —

---

# புதைத்து வையுங்கள்



ஆழமாக ஆழமாக
நெஞ்சு நிலத்தை வெட்டி
உங்கள் அழுகைகளை
புதைத்து வையுங்கள்.

நாளை அது
நல் விருட்சமாய்த் தோன்ற
எருவாக இன்று
உங்கள் அழுகைகளை
புதைத்து வையுங்கள்
ஆழமாக ஆழமாக

த. தயாநிதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்றைய இலங்கை

*தென்னாசிய நிறுவன நிர்வாகிகளில் ஒருவரான திரு. வால்ற்றர் கெல்லர் 1988 மார்ச் 5 ந் திகதி முதல் ஏப்ரல் 17 ந் திகதி வரை இலங்கையின் பல பாகங்களுக்கும் நேரடியாக பயணம் செய்து சேகரித்த தகவல்களின் தொகுப்பு.*

(சென்ற இதழின் தொடர்ச்சி)

## மலையகம்

**தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவரும், கிராமிய தொழிற் துறை அமைச்சருமான திரு. தொண்டமானுடன் பேட்டி**

நான் மலையகத் தமிழர்களுடன் உரையாடியதன் மூலம் அவர்களில் யாருமே இந்தியாவுக்கு திருப்பியனுப்பப்படுவதை விரும்பவில்லை என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. இதைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன? சமாதான ஒப்பந்தத்தில் உள்ள திருப்பியனுப்பும் ஷரத்தைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?

திரும்பிப் போக விரும்புபவர்களும் இருக்கிறார்கள். திரும்பிப்போக விரும்பாதவர்களும் இருக்கிறார்கள். நாம் பின்னோக்கிப் பார்த்தால் இது 1964ல் செய்துகொள்ளப்பட்ட இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் ஒரு முடிவாகும். அதாவது குறிப்பிட்ட தொகையினர் இந்திய குடியுரிமையையும், குறிப்பிட்ட தொகையினர் சிறிலங்கா குடியுரிமையையும் 15 வருடகால எல்லைக்குள் பெறுவார்கள். சிறிலங்கா குடியுரிமை பெற அருகதையுள்ள 469,000 பேரில் இதுவரை 223,000 பேர் மட்டுமே குடியுரிமை பெற்றிருக்கிறார்கள். ஆகவே சிறிலங்கா அரசினர் இன்னும் 250,000 பேருக்கு குடியுரிமை கொடுத்தேயாக வேண்டும். மொத்தமாக இவ்வளவு தொகை கொடுக்கப்படும்வரை திருப்பியனுப்புதல் பற்றி யாருமே நினைக்க முடியாது. துரதிஷ்டவசமாக ராஜீவும், ஜே. ஆரும் சமாதான ஒப்பந்தத்தில் இந்த ஷரத்தைச் சேர்த்துவிட்டார்கள். இதற்கும் அகதிகள் பிரச்சினைக்கும் எதுவித சம்பந்தமுமில்லை. இந்த உடன்படிக்கை தோட்டத் தொழிலாளரைப் பொறுத்தவரையில் எந்தவிதத்திலும் சம்பந்தமற்றிருக்கையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாம் இதை ஏற்றுக்கொள்ள முடியாது.

1.2.1986ல் நிறைவேறிய குடியுரிமைச் சட்ட நடைமுறைப்படுத்தலில் நீங்கள் திருப்தியடைந்துள்ளீர்களா?

18 மாதங்களுள் 94,000 பேருக்கு குடியுரிமை வழங்கப்படுமெனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் 24 மாதங்கள் கடந்தும் 23,000 பேர் மட்டுமே இதுவரை குடியுரிமையைப் பெற்றிருக்கிறார்கள். 1986ல் நிறைவேற்றப்பட்ட மேற்படி சட்டம் தீவிரமாக அமுல்படுத்தப்படுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

160 மலையகத்தவர்கள் இன்னும் தடுப்புக் காவலில் இருக்கிறார்கள். இம்மக்களின் தலைவர் என்ற முறையில் இந்த 160 பேரையும் விடுவிக்க நீங்கள் என்ன முயற்சி செய்துள்ளீர்கள்?

மலையக மக்களை திரும்பவும் பழைய நிலைக்குக் கொண்டுவந்து, சரிவர அவர்கள் கவனிக்கப்பட்டு, எமது நாட்டுக்குப் பயனுள்ளவர்களாக வேண்டும் என்பதே எமது விருப்பம். நாம் இதுவரை தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். எனக்குத் தெரிந்தவரையில் 770பர் மட்டுமே தடுப்புக்காவலில் இருக்கின்றார்கள். இவர்கள் விடயத்தில் தயவு காட்டுமாறு அரசாங்கத்தைக் கேட்பதென தீர்மானித்து விட்டோம். சில இளைஞர்கள் வடக்கிலுள்ள இளைஞர்களுடன் தொடர்பு வைத்திருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட ஒரு இளைஞரின் குடும்பத்தவர் அத்தனை பேருமே அந்த இளைஞரின் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என முடிவுகட்ட முடியாது. அவர்கள் யாவரும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தின் விசுவாசமுள்ள அங்கத்தினர் மட்டுமல்ல, இந்த அரசாங்கத்துடன் மிகு நெருக்கமாக செயற்படுகிறவர்கள். ஆகவே இவர்கள் விடுதலை செய்யப்படுவதை நாம் கவனிக்க வேண்டும். இவர்களை விடுவித்தால் வேறேதாவது சிக்கல்கள் வரலாம் என அரசாங்கம் அஞ்சுகிறது. இவர்களை விடுவித்தால் சிங்கள ஜே.வி.பி.யினரை ஏன் விடுவிக்க முடியாதென மற்றவர்கள் கேட்பார்கள். அதனால்தான் அரசாங்கம் சிறிது காலமாகத் தயங்குகிறது.

சில மலையக இளைஞர்கள், சில வடக்கிலங்கை இளைஞர்களுடன் தொடர்புகள் வைத்திருக்கக்கூடும் என்று நீங்கள் சொன்னீர்கள். ஈரோஸ் எனப்படும் அமைப்புக்கு மலையகத்தில் செல்வாக்குள்ளதென்று கருதப்படுவதைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?

எல்லோரும் அப்படித்தான் சொல்லுகிறார்கள். ஈரோஸ் ஊடுருவி செல்வாக்குப் பெற்றிருக்கக்கூடும். ஈரோஸுக்கு அதிக செல்வாக்குண்டு எனப் பிரச்சாரம் செய்பவர்களும் இருக்கிறார்கள். நான் அப்படிக் கருதவில்லை.

www.tamilarangam.net

சிறியளவிலான உறவு இருக்கக்கூடும். ஆனல் மேலெழுந்தவாரியாகக் கவனி த்தால்இப்படிச் செல்வாக்கு இருக்கிறது என்று காட்ட விரும்புவபர்கள் கூறுமளவிற்கு எதுவுமில்லை.

# தெற்கு

தெற்கு, வட மத்திய மாகாணங்களில் தடைசெய்யப்பட்டுள்ள ஜே.வி.பி யினரால் புதிய நெருக்கடிகளும், பிரச்சனைக்ளும் தலைதூக்கியுள்ளன. பாதுகாப்புப்படைகள் ஜே.வி.பி அங்கத்தவர்களை வேட்டையாடுகின்ற னர். இவர்களை வேட்டையாடும் சாக்கில் அப்பாவிப் பொது மக்கள், சி.சு.க. உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு மனிதாபிமான மீறல்கள் நடைபெறுவதாகப் பரவலாகப் பேசப்படுகிறது.

முன்னுள் பிரதமர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கவுடன் பேட்டி

ஜே.வி.பி. யின் நடவடிக்கைகளின் பின்னர் தெற்கிலும், வட மத்திய மாகா ணத்திலும் மனிதாபிமான மீறல்கள் நடைபெறுகிறது எனக் கூறப்படுகிறது. பாதுகாப்பு படையினரின் நடவடிக்கைகள் வேறு கட்சி அங்கத்தவர்களை யும் பாதித்திருக்கிறதா?

ஏராளமான நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. உதாரணமாக எனது கட்சியின் மெடிகிரியா கிளையின் காரியதரிசி எந்தக் குற்றச்சாட்டுகளுமில்லாமல் பங் குனி 88ல் கைது செய்யப்பட்டார். இப்பொழுது அவர் மறைந்து விட்டார். நாம் இராணுவ அதிகாரியைக் கேட்டபோது இது பற்றித் தனக்குத் தெ ரியாதெனக் கூறினர். எமக்குத் தெரியும் அவரது கையை முறித்த பின்பு கொலைசெய்து விட்டார்கள் என்று. அநேகமாகக் குழிகளைத் தோண்டி அக் குழிகளுக்குள் போட்டு எரிக்கிறர்கள். பயங்கரமான விடயங்களை கேள்விப்படுகிறோம். 'பெல்சன் முகாம்' மாதிரி இருக்கிறது.

நீங்கள் உண்மையாகவே பெல்சன் முகாமுடன் ஒப்பிடுகிறீர்களா?

நான் உண்மையாகவே ஒப்பிடமாட்டேன். ஆனல் நான் பெல்சன் முகாமைப் பற்றிக் கேள்விப்பட்டேன். குழிகள், சுடும் வெயில் இவைதான் நாம் மக்களிடமிருந்து அறிந்தவை. நான் இந்த இடங்களுக்குச் சென்று உண்மையை அறிய முடியாது. ஜனாதிபதி பாதுகாப்புப் படையினரிடம் இந்தச் சக்திகளை அழிக்க நீங்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்தாலும் உங்களைப் பாதுகாப்பேன் என்று கூறி ஞர். உங்களைப் பாதுகாக்க விசேட சட்டத்தைப் பாராளுமன்றத்தில் கொ ண்டு வருவேனென்றூர். நீங்கள் 'கொல்லுங்கள்' என்று அவர் சொன்னூர். பாதுகாப்புப் படைகள் இப்போது கொல்லுகின்றன. ஆனல் அவர்கள் இந்தக்

www.tamilarangam.net

கொலைக் குற்றங்களிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள். இது பற்றி யாரா லும் எதுவுமே செய்ய முடியாது.

நீங்கள் யாரைக் குற்றம் சாட்டுகிறீர்கள்?

சகல பாதுகாப்புப்படையினரையும் பழி கூறுகிறேன். எனது மருமகனை (திரு. விஜய குமாரணதுங்க) கொலை செய்த கொலையாளியை ஏற்றிச் சென்ற தாக கருதப்பட்ட மோட்டார்சைக்கிளோட்டியை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தார்கள். அவரை அப்படித் தடுத்து வைத்ததினால் எனது மருமகனைச் சுட்டவரின் பெயர் கிடைத்துள்ளது. ஆனால் இவரைக் கொன்ற தன் மூலம் சகல தடயங்களையும், சாட்சிகளையும் இழந்துவிட்டனர். எனது கருத்துப்படி அவர் கொல்லப்படவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கவி ல்லை. சித்திரவதைகளால் அவர் இறந்துவிட்டார்.

நீங்கள் குறிப்பிடுவது தடுப்புக்காவலில் இருக்கும்போது நிமோனியாவில் இற ந்தவரைப் பற்றியா? (28.03.88ந் திகதி வெளியான 'தி ஐலண்ட்' பத்தி ரிகையில் தடுப்புக் காவலிலிருந்த சந்தேக நபர் நிமோனியாவால் இறந் துவிட்டதாக பொலிசார் தெரிவித்திருப்பதாக செய்தி வந்திருந்தது)

(சிரிப்பு). அபத்தம். யாருமே இதை நம்பவில்லை.

ஏராளமான உங்கள் கட்சித் தொண்டர்கள் கைது செய்யப்படுவதால் அர சாங்கம் வேண்டுமென்றே உங்கள் கட்சியைத் தாக்குகிறதா?

நிச்சயமாக. அவர்கள் தெரிந்தே பிடிக்கிறார்கள். இது நிச்சயமாக அரசி யல் பழிவாங்கல்தான்.

மக்கள் காணமல் போய்விட்டதாக் கூட அறிக்கைகள் வந்ததே?

ஆம். அவர்களால் பிடிக்கப்பட்டபின் பலரை பார்க்க முடியாது. ஏராளமா னோரைக் காணவில்லை. சிலர் பயத்தினால் தலைமறைவாகி இருக்கக்கூடும். பயங்கரவாதத்தை அழிப்பதற்கான வழி இதுவல்ல. இந்த வழியினால் அதிகமா ன மக்கள் பயங்கரவாதத்துள் தள்ளப்படுகிறார்கள்.

அதிகச் சிங்களச் செறிவுள்ள பகுதிகளில் மக்களின் எதிர்புகட்குக் காரணம் என்ன?

ஏற்பட்ட ஏமாற்றங்கள். குறிப்பாக 1982ல் தேர்தல் ஒத்தி வைக்கப்ப ட்டமை. 1983ல் ஜே.வி.பி. யினர் தடை செய்யப்பட்டமை. அரசாங்கம் சகலவற்றிற்குமான பழியை ஜே.வி.பி. யினரில் போடுகிறது. (1983ம் ஆண்டு கலவரத்தின் பின் —வா.கெ.) நாடு முழுவதற்கும், தமிழர்களுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்றாகத் தெரியும் இது அரசாங்க மந்திரிகளால் செய்யப்பட்டதென்று. தடைசெய்யப்பட்டதுமே ஜே.வி.பி.யினர் இரகசியமாகச் செயற்படத் தொடங்கிவிட்டார்கள்.சமாதான உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்டதுமே இவர்கள் ஒருங்கிணைந்து கொண்டார்கள்.ஜே.வி.பி.மீதான தடையை நீக்கும்படி நாம் இந்த அரசாங்கத்திடம் வேண்டுகின்றோம்.அவர்கள் வெளியே வரட்டும்.போட்டியிடட்டும்.

சமாதான உடன்படிக்கை எதிர்ப்பினால் உங்கள் கட்சி பலமடைகிறதா?

நாம் இந்த உடன்படிக்கையை எதிர்க்கிறோம்.ஆனால் நாம் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கவில்லை.ஜே.வி.பி.யின் பயங்கரவாதத்தால் முதன் முதல் பாதிக்கப்பட்டது நாங்களே.ஆட்சிப் பொறுப்பு ஓரளவு விஸ்தரிக்கப்படவேண்டுமென்பதில் சந்தேகமில்லை.ஆனால் தமிழர்கள் கேட்டுக் கொண்டேயிருப்பார்கள்.அவர்களைத் திருப்திப்படுத்தவே முடியாது.அவர்கள் நன்றாக இருக்கிறார்கள்.இந்தியா அவர்களுக்குப் பணம் கொடுக்கிறது.எம்.ஜி.ஆர் பணம் கொடுத்துள்ளார்.அவர்கள் கொல்லுகிறார்கள்.தேர்தல் நடக்கவிருந்தால் எல்.ரி.ரி.ஈ. அதை நடாத்த அனுமதிக்க மாட்டாது.ஏனெனில் அவர்களுக்குத் தெரியும் தாங்கள் வெற்றிபெற மாட்டோம் என்று.அதிக மக்கள் எல்.ரி.ரி.ஈ.க்குப் பயப்படுகிறார்கள்.ஒரு இரகசிய வாக்கெடுப்பில் எல்.ரி.ரி.ஈ வெற்றிபெற முடியாது.வடக்கே அவர்கள் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது.

உங்கள் கட்சி எதிர்வரும் மாகாண ஆட்சித் தேர்தல்களின் முடிவுகளை ஏற்றுக் கொள்ளுமா?

அவை நியாயமானதாக இருந்தால் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.ஆனால் அவர் எப்போது பொதுத் தேர்தலை நடாத்தப் போகிறார் எனத் தெரியாது.அவருடைய திட்டங்கள் எவை என்று எமக்குத் தெரியாது.அந்த மனிதரை ஆழம் காண முடியாது.

நாட்டு நிலைமைகள் வழமைக்குத் திரும்பிவிட்டன என்று நீங்கள் கருதுகிறீர்களா?ஐரோப்பாவிலிருந்து தமிழ் அகதிகள் திரும்பி வரக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டா?

நிலைமைகள் சீரடையவில்லை.நீங்கள் வடக்கு, கிழக்கு நிலைமைகளை நேரில் பார்த்தீர்கள்.கொழும்பு வேறுபட்டது.1983ம் ஆண்டுக்குப் பிறகு கலவரங்கள் எதுவுமில்லை.கொழும்பைச் சேர்ந்தவர்கள் இங்கு திரும்பி வரலாமென நான் கருதுகிறேன்.இங்கு நிலைமைகள் சீராக உள்ளன.இங்கும் அவ்வப்போது வெடிகுண்டுகள் வெடிக்கின்றன.அந்த வகையில் யாருக்குமே பாதுகாப்பில்லை.ஆனால் தெற்கில் முஸ்லீம்கள், சிங்களவர்கள் பாதுகாப்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருப்பதுபோல் அவர்களும் இருக்கலாம். வடக்கு, கிழக்கில் நிலமைகள் வேறு. அங்கே இந்திய சமாதானப்படையினரும், எல்.ரி.ரி.ஈ.யும் இருக்கிறார்கள். ஐரோப்பாவிலிருந்து திரும்பிவரும் அகதிகள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என எனக்குத் தெரியாது. பயங்கரவாத இயக்கங்களில் சேர விரும்பாத சிறு இளைஞர்களும் போயிருக்கிறார்கள்.

கன்றுகுட்டித்தனமான கைதுகள், காணமல் போதல் என்பவைகளை ஆராய தென்பகுதியில் முதன்முதலாக மனிதாபிமான சட்ட உதவி நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அந் நிறுவனத்தின் அமைப்புக் காரியதரிசியும், பெலியத்த தொகுதி முன்னாள் சி.சு.கட்சி அங்கத்தவருமான திரு.மகிந்த ராஜபக்ஷவுடன் பேட்டி

தெற்கே தற்போதுள்ள நிலமைகளைப் பற்றி விபரிப்பீர்களா?

தற்போது பாதுகாப்பு படையினர் தெற்கே குறிப்பாக மாத்தறை, அம்பாந்தோட்டை, தங்காலை பகுதிகளில் ஏராளமான இளைஞர்களை கைது செய்துள்ளனர். இவர்களது கைது பற்றி யாருக்கும் எந்தவித அறிவித்தலும் கொடுக்கப்படவில்லை. சிலர் காணமல் போய்விட்டார்கள். பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டோரின் இனம் தெரியாத சடலங்கள் பாதைகளில் காணப்படுகின்றன. அண்மையில் முறையே 18,19 வயதுடைய இரண்டு பாடசாலை மாணவர்கள் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டனர். இந்த ஆட்சியில் மனிதாபிமான மீறல்கள் நடக்கிறது.

இப்பிரச்சனைகளுக்குரிய காரணங்கள் என்ன?

இந் நாட்டு இளைஞர்கள் கடந்த 10 வருடங்களாக தேர்தலில் வாக்களிக்க காத்திருந்தார்கள். இளைஞர்கள் இந்த அரசாங்கத்திற்கெதிராக தீவிர நடவடிக்கைகளில் இறங்குவதற்கு இதுவும் ஒரு காரணம். ஜே.வி.பியைத் தடைசெய்ததும் ஒரு காரணம். தற்போதைய அரசாங்கம்தான் இவற்றிற்குப் பொறுப்பு. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறுவது போலவே இப்போது இங்கே நடைபெறுகிறது. விசேட அதிரடிப்படை, இராணுவம், விமானப்படை, கடற்படை, பொலிஸ் போன்ற சகல பாதுகாப்புப் படையினரும் தெற்கே வந்துவிட்டார்கள். ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் ஆகக் குறைந்தது 15 இளைஞர்களாவது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு கைது செய்யப்படுவோர் படையினரால் மூர்க்கத்தனமாகத் தாக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் வந்துள்ளன. இந் நிலை ஜே.வி.பி.யினரை மட்டும் பாதிக்கவில்லை. அரசாங்கத்திற்கெதிரான ஒவ்வொருவரும் கைதுசெய்யப்படுகிறார்கள்.

www.tamilarangam.net

# கொழும்பு

முன்னாள் இந்து பத்திரிகையின் நிருபரும், தற்போதைய தி ஐலண்ட் பத்திரிகையின் நிருபருமான திரு. டி. பி. எஸ். ஜெயராஜ்ஜுடன் பேட்டி

ஐரோப்பாவில் சில அரசாங்கங்கள் தற்போது சிறிலங்கா நிலைமை சீரடைந்து பழைய நிலைமைக்குத் திரும்பிவிட்டதால் தமிழ் அகதிகள் திருப்பியனுப்பப்படலாம் என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றன. இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

அரசியல் தஞ்சம் தேடி வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் திரும்பி வரும் அளவிற்கு இன்னும் நாட்டு நிலைமை சீரடையவில்லை. தனித் தனியாக அகதிகள் திரும்பிக் கொண்டுமிருக்கிறார்கள். ஆனால் மொத்தமாக இவர்கள் திரும்பிவரும் அளவிற்கு நாட்டு நிலைமைகள் உகந்ததல்ல. மேலும் பாரியளவில் தமிழ் அகதிகள் ஒரே நேரத்தில் திரும்புவது தற்போதைய நிலைமைகளை மேலும் சீர்குலைக்கக்கூடும். 3 காரணங்களை கூற விரும்புகின்றேன்.

1. தமிழ் தீவிரவாத இயக்க இளைஞர்களை வேட்டையாடுதல் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. எல்.ரி.ரி.ஈ. இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது. அநேகமான தமிழ் இளைஞர்கள் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுகிறார்கள். கொழும்பிலும் நிலைமைகள் வழமைபோல் இல்லை. எனக்குத் தெரியக் கூடியதாக பல தமிழ் இளைஞர்கள் வெறும் சந்தேகத்தின் பேரில் கொழும்புப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பஸ்ஸிலிருந்து பிடிக்கப்படுகிறார்கள். தெருவில் நடந்து போய்க் கொண்டிருக்கும் வேளையில் பிடிக்கப்படுகிறார்கள். சாப்பாட்டு விடுதிகளில் கைது செய்யப்படுகிறார்கள். சிலர் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்படுகிறார்கள். சிலர் இன்னும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு தமிழ் தீவிரவாத இயக்கமான ஈ.பி.ஆர்.எல்.எவ் தான் கிழக்கே முஸ்லீம்களுக்கெதிரான கலவரங்களின் பின்னணிச் சக்தியென பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.
2. சர்வதேசப் போதைப் பொருட்கள் கடத்தல் தமிழர்களால் நடாத்தப்பட்டு வருவதாக குற்றச்சாட்டு ஒன்று கூறப்படுகிறது. தற்போது கூட இது சம்பந்தமான வழக்கொன்று கொழும்பில் நடைபெறுகிறது. இவ் வழக்கில் தமிழ் போதை வஸ்து கடத்தல் கும்பல் ஒன்றின் விபரங்கள் வெளிவருமெனக் கூறப்படுகிறது. இச் சந்தர்ப்பத்தில் அகதிகள் திரும்பி வரும்போது சந்தேகத்திற்கு ஆளாவார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. இந்தியப்படையினரால் இன்னும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் புனருத்தாரண வேலைகள் எதுவுமே வடக்கு, கிழக்கில் நடைபெறவில்லை. இந்தியப்படையின் நடவடிக்கைக்குப் பின்னர் உண்மையாகவே யாழ் மாவட்ட மக்கள் தொகையில் மூன்றிலொரு பங்கினர் அரசாங்கத் தயவிலும், படி உணவிலுமே காலத்தை கடத்துகிறார்கள். ஒப்பிட்டு பார்க்குமிடத்தில் சமாதான உடன்படிக்கைக்குப் பின்னர் அகதிகள் தொகை அதிகரித்திருக்கிறது. ஆயுதங்களை ஒப்படைத்த தீவிரவாதிகளும் இதுவரை புனரமைக்கப்படவில்லை. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் (சுமார் 4,000. -வா.கெ.) தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டாலும் அவர்களுக்குப் புனர்வாழ்வு கிடைக்கவில்லை. வடக்கிலும், கிழக்கிலும் வழிப்பறி, கொள்ளைச் சம்பவங்கள் பெருகி ஒருவித சமுதாயச் சீர்கேடு உருவாகியுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் ஐரோப்பாவில் ஒரு மாறுபட்ட வாழ்க்கையை அநுபவித்துக்கொண்டிருக்கும் அதிகமான தமிழர்களை இங்கு கொண்டு வருவது சமூகப் பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கும். இந்நிலையில் இங்குள்ள சீர்குலைந்த பொருளாதாரம் அவர்களை இணைத்துக்கொள்ளாது. இராணுவ நடவடிக்கைகள் ஓய்ந்து, வடக்கிலும், கிழக்கிலும் மாகாணசபைத் தேர்தல்கள் நடக்கும்வரை தமிழ் அகதிகளை திரும்பிப் போகும்படி கேட்டுக்கொள்ளக்கூடாதென நான் விரும்புகின்றேன்.

---

சர்வதேச இன ஆய்வு நிலைய ஆய்வாளர் திரு. சுனில் பஸ்தியானுடன் பேட்டி

*நீங்கள் சிறிலங்காவின் பல்வேறு பகுதிகளின் நிலமைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறீர்கள். ஐரோப்பாவிலிருந்து தமிழ் அகதிகள் திரும்பிவருமளவிற்கு போதுமான புனருத்தாரணத் திட்டங்கள், செயற்பாடுகள் உண்டா?*

சமாதான உடன்படிக்கை கைச்சாத்தானதும், புனருத்தாரணம், சீரமைப்புகள் பற்றி பெரியளவில் பேசப்படுவதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் நாங்கள் பார்க்குமிடத்து அப்படியெதுவும் நடக்கவில்லை. அப்படி நடந்தது மிகக் குறைவே. ஒருபுறம் மிகப் பெரியளவில் இராணுவ நடவடிக்கை வடக்கிலும், கிழக்கிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் பதட்டநிலை நிலவுகிறது. அங்குமிங்குமாகச் சிலவற்றைத் தவிர குறிப்பிடத்தக்களவு புனருத்தாரண வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. இப்படிப்பட்ட நிலையில் ஏராளமானோர் ஐரோப்பாவிலிருந்து திரும்பி வந்தால் அவர்களுக்கு என்னவாகும் என்ற கேள்வியெழும். எப்படி

அவர்களை ஸ்தாபிப்பது, எப்படி புனர்வாழ்வு கொடுப்பது, எங்கே குடியமர்த்துவது போன்ற கேள்விகள் எழும். தெற்கு பாதுகாப்பாக உள்ளது. அங்கே குடியமர்த்தலாம் என்பது ஒருசாராரின் வாதம். ஐரோப்பாவிலிருந்து திரும்பும் தமிழர்களை தெற்கே குடியமர்த்துவது அங்குள்ள பிரச்சினையை இன்னும் அதிகரிக்க வைக்க ஒரு நல்லவழி என்பதே எனது வாதம். ஏனெனில் தெற்கிலிருக்கும் சிங்களவர்களின் கடும் எதிர்ப்பை இது வெளிக்கொண்டு வரும். குறிப்பாக வெளிநாட்டு பண உதவியுள்ள இப்படிப்பட்ட பல திட்டங்கள் அமுல் செய்யப்படுமிடத்து சிங்களவர்களின் எதிர்ப்புகள் மிகத் தீவிரமாகவும், பலமாகவும் அமையும். இது நடக்கக்கூடிய காரியமென நான் நினைக்கவில்லை.

---

இந்தியாவிலிருந்து கொழும்புக்குத் திரும்பிவந்த தமிழ் அகதி திரு. வில்சன் தெரிவித்த தகவல்கள்:

ஐரோப்பாவிலிருந்து சிறிலங்கா அகதிகள் திருப்பியனுப்பப்படும் பட்சத்தில் அவர்கள் ஏராளமான தொல்லைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். முதலாவதாக அரசினரால் எதுவித சீரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாக, வடக்கு, கிழக்கில் அமைதியில்லை. ஆயுதம் தாங்கிய பிரிவினர் எதுவித கட்டுப்பாடுமின்றி நடமாடுகின்றார்கள். வடக்கு, கிழக்கில் அராஜகம் நிலவுகிறது. யாராவது திருப்பியனுப்பப்படுவதாயிருந்தால் அவர்கள் கொழும்பில்தான் இருக்க வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் கொழும்பும் பாதுகாப்பான இடமல்ல. சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் தினமும் தமிழர்களைச் சுற்றி வளைத்துப் பிடிக்கிறார்கள். பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக சந்தேகிக்கிறார்கள்.

---

திருகோணமலையைச் சேர்ந்தவரும், மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்தவருமான திருமதி செல்லம்மாவுடன் அவரை இலங்கைக்குத் திருப்பியனுப்புவதற்கு முன் எடுத்த பேட்டி:

எப்படி இந்தியா வந்தீர்கள்? இலங்கைக்குத் திரும்பிப்போக விரும்புகிறீர்களா?

நாங்கள் திருகோணமலையில் கும்புறுப்பிட்டியா என்ற இடத்தில் வாழ்ந்தோம். சிங்கள இராணுவத்தினரின் வன்முறைகளிலிருந்து எங்களுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வீடுகளைவிட்டு நாங்கள் வெளியேறினோம். துப்பாக்கிச் சூடுகளிலும் காடுகளுக்குள் புகுந்து கடுமையான, நீண்ட பயணத்

www.tamilarangam.net

தின்பின் முல்லைத்தீவுக்கு வந்தோம். அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்தோம். யாழ்ப்பாணத்தில் நல்லூர் என்ற இடத்திலுள்ள அகதிகள் முகாமில் சில காலம் தங்கியிருந்தோம். தொடர்ந்து நாங்கள் அங்கே தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. சிங்கள இராணுவம் தரை, ஆகாய மார்க்கமாக தாக்குதல்களை ஆரம்பித்தது. இதன் பின்னர் நாங்கள் இந்தியாவுக்கு வந்தோம். இலங்கையில் பிரச்சினைகள் இன்னும் இருப்பதால் நாங்கள் அங்கே திரும்பிப்போக விரும்பவில்லை. ஆனால் அதிகாரிகள் எங்களைத் திரும்பிப் போகும்படி கட்டாயப்படுத்துகிறார்கள். நாங்கள் அங்கே எப்படி வாழ்வது?

(மண்டபம், திருச்சி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகள் அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி அதிகாரிகளால் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். அகதிகளுக்கான உணவுப் பொருட்களை இரத்துச் செய்யும்படி அதிகாரிகளால் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டுகளைப் பற்றி அகதிகள் முகாமுக்குப் பொறுப்பானவருடன் கதைக்க முடியாதபடி, பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுக்கக் கூடாதென அவர் மேலதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்.
- வா.கெ.)

---

4½ வருடங்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்து சமாதான ஒப்பந்தத்தின் பின் விடுவிக்கப்பட்ட சிறிபத்மனுடனான பேட்டியின் தொகுப்பு

நான் 6.9.83ல் கைது செய்யப்பட்டு சமாதான ஒப்பந்தத்தின் பின் விடுவிக்கப்பட்டேன். மட்டக்களப்பில் நான் விசாரிக்கப்பட்டபின் தங்காலை, பூசா, மகசீன், வெலிக்கடை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன். சிறிலங்காப் படைகள் என்னைக் கைது செய்து மிருகத்தனமாகச் சித்திரவதைகள் செய்தன. எனக்குச் செய்யப்பட்ட சித்திரவதைகளினால் எனது வலதுகால் இடது காலைவிட ஒரு அங்குலம் குறுகிவிட்டது. சிறுநீரைக் குடிக்க வைத்தார்கள். இரும்புகளாலும், பொல்லுகளாலும் அடித்தார்கள். தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு மிளகாய்த்தூள் பூசினார்கள். மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலேயே எனக்கு மோசமான அனுபவங்கள் ஏற்பட்டன. ஏ.எஸ்.பி. ஸ்ரீரங்பதி மிக மோசமாக நடந்து கொண்டான். என்னை நீதிமன்றத்தில் நிறுத்தியபோது ஏ.எஸ்.பி.தான் உண்மையான பயங்கரவாதியென்று நீதிபதியிடம் பகிரங்கமாகவே சொன்னேன். தடுப்பு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட இளைஞர்கள் எந்த எதிர்காலமுமில்லாமல் தெருக்களில் அலைந்துகொண்டிருக்கும் திருகோணமலைக்கே நான் திரும்புகின்றேன்.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வீரகேசரிச் செய்திகள்

01.05.88

வவுனியா மாவட்டத்திலுள்ள அவரந்தலாவ எனுமிடத்தில் பிரயாணிகள் பஸ் ஒன்றின் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களில் 11 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 6 பேர் இலங்கை இராணுவத்தினர். 5 பேர் சிங்கள கிராமவாசிகள்.

நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல்களில் ஒரு இலட்சம் வாக்குச் சீட்டுகளில் வேண்டுமென்றே கீறல்கள், கூடுதலான அடையாளங்கள் இடப்பட்டிருந்தமையினால் நிராகரிக்கப்பட்டன. இலங்கையின் தேர்தல் வரலாற்றில் இவ்வளவு தொகை வாக்குகள் நிராகரிக்கப்பட்டமை இதுவே முதற் தடவையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02.05.88

01.05.88ல் திருகோணமலை மாவட்டத்திலுள்ள சித்தாறு எனுமிடத்தில் இடம்பெற்ற கண்ணிவெடி விபத்தில் இ.போ.ச பஸ் ஒன்று சிக்கியதில் 26 பொது மக்கள் கொல்லப்பட்டனர். 32 பேர் பலத்த காயமடைந்தனர். பஸ்ஸில் 3 இன மக்களும் பயணம் செய்திருந்தனர்.

03.05.88

திருகோணமலை சிவன் கோவில் முன்றலில் அன்னையர் முன்னணியைச் சேர்ந்த திருமதி சுசிலா கணேசன் 23வது நாளாக உண்ணாவிரதமிருந்து வருகிறார்.

04.05.88

தமிழக கல்லூரிகளில் இலங்கைத் தமிழ் மாணவர்களைப் புதிதாகச் சேர்க்கக் கூடாதென இந்திய மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்தியாவிலுள்ள 1 இலட்சம் இலங்கைத் தமிழ் அகதிகளில் 13,000 பேர் மாணவர்கள்.

07.05.88

"அவசர காலச் சட்டம் அமுலில் உள்ளவரை வடக்கு, கிழக்கில் மாகாணசபைத் தேர்தல்கள் இல்லை" —ஜனாதிபதி.

முல்லைத்தீவில் இரண்டு பெண்களை இனந்தெரியாதோர் சுட்டுக் கொன்றனர்.

08.05.88

சப்பிரகமுவ மாகாணத்தில் கேகாலையிலும், இரத்தினபுரியிலும் இரண்டு சுதந்திர வர்த்தக வலயங்களை அமைக்கத் தீர்மானித்திருப்பதாக சப்பிரகமுவ முதலமைச்சர் தெரிவித்தார்.

www.tamilarangam.net

09.05.88

"இந் நாட்டின் அடுத்த ஜனாதிபதி நானே.இதைத் தடுக்க யாராலும் முடியாது" -சிறிமாவோ பண்டாரநாயக்க.

"நாம் ஆட்சிக்கு வந்தால் எமது அரசில் ரோகண விஜேவீரவுக்கு இளைஞர் வேலை வாய்ப்பு அமைச்சர் பதவியைத் தருவோம்" - அநுரா பண்டாரநாயக்க.

மட்டக்களப்பு,அம்மாறை மாவட்டத்தில் ஏட்டிக்குப் போட்டியாக இயக்க உறுப்பினர்கள் கடத்தப்படுகின்றனர்.மாற்று இயக்கத்தினரால் கடத்திக் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட இரு வாலிபர்களின் சடலங்களை இந்திய இராணுவம் தோண்டியெடுத்து உறவினர்களிடம் ஒப்படைத்தது.

10.05.88

புலிகளைத் தேடி வடமாராட்சிப் பகுதியில் இந்திய இராணுவத்தினர் தேடுதல் வேட்டை நடாத்துகின்றனர்.காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்படுகிறது.ஊரடங்குச் சட்டத்தினால் கடற்கரையோரக் கிராமங்களில் வாழ்பவர்கள் ஒருவேளை உணவைக்கூடத் தேட முடியாமல் கஉடீடப்படுகின்றனர்.

11.05.88

ஜே.வி.பி. மீதான தடை நீக்கப்பட்டது.

வடக்கிலும் 'கெரோயின்' பாவனை அதிகரித்துள்ளதாக டாக்கடர் நச்சினார்க்கினியன் பெற்றோரை எச்சரித்துள்ளார்.

12.05.88

மன்னாரில் வயது வித்தியாசமின்றி பலர் கைது செய்யப்பட்டு கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து அடித்து துன்புறுத்தப்படுகிறார்கள்.

13.05.88

"இன்று இந்த நாட்டில் புதியதொரு சோசலிஸம் ஏற்பட்டுள்ளது.முன்னாலும் துப்பாக்கியை நீட்டுகிறார்கள்.பின்னாலும் நீட்டுகிறார்கள்.சாதாரண மக்களுக்குச் சேவை செய்பவர்களைச் சுட்டுக் கொல்லுகிறார்கள்" - சப்பிரகமுவ முதலமைச்சர்.

26.05.88

பலாலி,மயிலிட்டி,ஊறணி,காங்கேசன்துறைப் பகுதிகளில் விதிக்கப்பட்டுள்ள இரவு நேர மீன்பிடித் தடையால் மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் 3,000 குடும்பங்களும்,அவர்களை அண்டிவாழும் 5,000 குடும்பங்களும் பட்டினிச் சாவை எதிர் நோக்கியுள்ளன.

www.tamilarangam.net

# விடியலுக்கு முந்திய இரவு

புதிய கல்வீடுகள்
சோலையெனப் பயிர்கள்
திருவிழாக்கள்
நின்றுபோன கல்யாணம்.
ஒழித்துக் கொண்ட
அமைதியெல்லாம்
மீண்டும் வருமென மக்களிற் பலர்
நினைத்துக் கொண்டிருக்கையில்
ஓர் நாள்
அவர்களின் வருகை ஆரம்பமாயிற்று.

துப்பாக்கி ஏந்திய அமைதி
வீரராய்
கப்பலில் வந்து
இறங்கினர் அவர்கள்.
தாங்கிகள் ஏவுகணைகள்
யுத்த விமானமென
போருக்கு
வேண்டிய அனைத்தையும்
இறக்கியது அவர்தம் கப்பல்.

மாலையும் கையுமாய்
மக்களின் கூட்டம் வழி நெருக்க.
வந்தவர் மகிழ்ந்தார்.
சில நாள் அமைதி
மகிழ்ந்து போய் இருக்கையில்
எல்லாம்
கனவாய்ப் போயிற்று.

மறுபடியும் வீடுகள் இடிந்தன.
பயிர்களும் தரையில் சாய்ந்தன.
திருவிழாக்கள் நின்று போயின.
கல்யாண மாப்பிள்ளை
காணாமற் போனான்

நேற்றைய பொழுதில்
கை கோர்த்திருந்த
கந்தசாமியும் அப்துல்காதரும்
செல்லடிபட்டு
வீதியில் இறக்க

சந்திரனும் பயந்து போய்
மௌனமாய்
இருக்க

வானம் இருட்டியிருந்தது
விடியவக்காக.



அன்ரன் யூட்

www.tamilarangam.net

# ஆக்கதாரர்களுக்கு ஒரு சந்தர்ப்பம்

மேற்கு ஜேர்மனிக்கு அகதிகளாக வந்திருப்பவர்களிடமிருந்து கதை, கவிதை, அனுபவங்கள், கருத்துகள், புகைப்படங்கள், ஓவியங்கள் என்பன வரவேற்கப்படுகின்றன. இவற்றைப் பிரசுரிக்க நிறுவனமொன்று விரும்புகிறது.

தப்பி வருதல், ஞாபகங்கள், ஆசைகள், விருப்பங்கள், அன்பு, குடும்பம், மேற்கு ஜேர்மனியில் உங்கள் வாழ்க்கை, பொது அலுவலகங்கள், சமூக சேவையாளர்கள், பயம், கோபம், பகுத்தறிவு, நாளாந்த வாழ்க்கை போன்றவைகளைப்பற்றிய உங்கள் ஆக்கங்கள் அமைந்திருக்க வேண்டும்.

ஜெர்மனிலோ அல்லது உங்கள் தாய்மொழியிலோ ஆக்கங்கள் அமைந்திருக்கலாம். மொழிபெயர்ப்பில் கவனமெடுக்கப்படும். நீங்கள் அனுப்புவது மொழிபெயர்ப்பாக இருந்தால் அதன் மூலப் பிரதியையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

30.09.1988வரை உங்கள் ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம்.

உங்களுடைய சொந்தப் பெயர், குடும்பப் பெயர், பிறந்த திகதி, முகவரி என்பன ஆக்கங்களில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். உங்கள் பெயரைப் பிரசுரிப்பது உங்கள் விருப்பமே.

உங்கள் ஆக்கங்களை அனுப்பி வைப்பதற்கும், மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்குமான முகவரி -


LUCHTERHAND LITERATUR VERLAG
z.Hd.Anja Tuckermann
Donnersbergring 18a

6100 Darmstadt



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கனவை மிதித்தவன்

— பார்த்திபன்

ஞானத்தைச் சமாதானப்படுத்துவதற்குள் பாலகுமார் களைத்துப்போய் விட்டான். கூடிவிட்ட பார்வையாளர்களை விலத்தி, அவனை அறைக்குள் கூட்டிவந்து, கதவை உட்புறமாகப் பூட்டிய பின்தான் பாலகுமார் பெருமூச்சு விடச் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஞானம் கட்டிலில் சரிந்தபடி அழுது கொண்டிருந்தான். சேர்ட்டில் இரண்டு இடங்களில் மட்டுமே கிழிந்திருந்தது. உடம்பு நன்றாக வியர்வை பூசியிருந்தது.

பாலகுமார் அவனுக்கெதிரேயிருந்த கட்டிலில் வந்து அமர்ந்தான். கொஞ்ச நேரம் மௌனத்திற்குச் சுதந்திரம் கிடைத்தபின் பாலகுமார் வாயைத் திறந்தான். "உனக்கென்ன நடந்தது?"

ஞானம் உடனே பதிலளிக்கவில்லை. கட்டிலிலிருந்து உடம்பை நிமிர்த்தினான். முகபாவம் பரிதாபமாக இருந்தது.

"நான் றெஸ்ரோறண்டில வேல செய்யிறது உனக்கு தெரியுமெல்லே?" ஞானத்தின் குரல் கரகரத்தது.

"ஸ்ரட் முழுக்கத் தெரியும். அதுக்கென்ன?"

"தேவனுக்கும் தெரியும்தானே?"

"அதுக்கே அவனோட சண்டை பிடிச்சனி?"

"சொல்லுறதவடிவாக் கேள். இண்டைக்குப் பகல் உவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவன் றெஸ்ரோறண்டுக்கு வந்தான். எனக்கு தாற சம்பளத்தைவிட தன க்கு குறைச்சுத் தந்தாலும் தான் வேல செய்வன் எண்டு சொல்லியிருக்கி றன். இன்டையோட என்னை வேலயிலயிருந்து நிக்கச் சொல்லி செவ்ப் சொல்லிப் போட்டார்."சொல்லிக் கொண்டிருந்த ஞானம் திடீரென ஆவேசமாக எழும்பினன்.

"பாலகுமார் உனக்குத் தெரியும் நான் எவ்வளவு கஷ்டப் பட்டு இந்த வேல எடுத்தனெண்டு. என்ரை வீட்ட கஷ்டமடா. அதுதான் நானே அரைச் சம்பளத்தில வேல செய்யிறன். தேவன் அதையும் நாச மாக்கிப் போட்டான். உவனை.." ஞானம் கதவை நோக்கிப் போக பாலகுமார் வேகமாக குறுக்கே வந்துநின்று மறித்தான்.

"ஞானம் நீ உதில இரு. நான் அவனோட கதைக்கிறன்" நடந்த உண்மையை அறிந்த ஆத்திரம் பாலகுமாரில் தெறித்தது.

"பாலகுமார் என்னை விடு. இன்டைக்கு உவனையொருக்கா பா க்காம விடமாட்டன்" ஞானத்தின் கோபத்தையும் மீறி அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

"சொன்னக் கேள். இப்ப நீ இஞ்ச இருக்க வேணும். நான் தேவனைப் பாக்கிறன். நீ வெளியில வந்தா பிறகு என்னோட கதையாத" பாலகுமார் சொல்லிவிட்டு ஒரு மாடி இறங்கி, வலப் பக்க அறைக்குள் போனன்.

தேவனும், இன்னொருவனும் பியர் குடித்துக் கொண்டிருந்தார்கள். பாலகுமார் அவர்களுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டான்.

"என்னடாப்பா நடந்தது?"

"ஞானத்துக்குத் தட்டிப் போட்டிது" தேவன் சிரித்தான்.

"விசயத்தை சொல்லன்ராப்பா"

"இன்டைக்கு அவன் வேல செய்யிற றெஸ்ரோறண்டில போய் வேல கேட்டன். செவ்ப்பும் ஓமெண்டிட்டான். அது இவருக்குப் பிடிக்கேல"

"ஞானத்தை வேலயால நிப்பாட்டிப் போட்டானும்"

"அவன் கூடக் காசுக்கு வேல செய்திருப்பான். நான் கொஞ் சம் குறையக் கேட்டன். அதாலயா இருக்கும்"

"உனக்கு ஞானம் அங்க வேல செய்யிறது தெரியுமோ தெரி யாதோ?" பாலகுமாரின் குரலில் வரத் தொடங்கியிருந்தசூட்டை தேவன் கவனிக்கத் தவறிவிட்டான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"தெரியும். அதுக்கென்ன செய்யிறது. நானும் வேல செய்யத் தான் வந்தனான். நீயும் வேல செய்யத்தான் வந்தனி. வேல கிடைக்கிறது அவையவையின்ர கெட்டித்தனத்தைப் பொறுத்தது"

படீர்.

தேவன் கதிரையுடன் உருண்டு விழுந்தான். பாலகுமார் ஆவேசமாக நின்றான். மூன்றாமவன் இத் திடீர்ச் சம்பவத்தால் திகைத்துப்போய் நின்றான்.

"சான்ஸ் கிடைக்கேக்க பாவிக்கிறியோ. நீயெல்லாம் ஒரு தமிழன். உனக்கெல்லாம் ஒரு நாடு" பாலகுமார் தேவனை நெருங்கி சேர்ட்டில் பிடித்து தூக்கினான். முகத்தில் குத்தினான். தேவன் நிற்க முடியாமல் தடுமாறினான்.

"நீ குறையச் சம்பளத்தில வேல செய்தா லாபம் உனக்கில்ல. ஆரோ முதலாளிக்குத்தான். உன்ரை மண்டைக்கு இதுகளெங்க விளங்கப் போகுது."

பாலகுமார் அந்த அறையைவிட்டு வெளியேறினான். அவனுக்குத் திருப்தியாக இருந்தது.

பாலகுமார் மாணவனாக இருக்கையில் உண்மையான கெட்டிக்காரன்தான். ஆனால் விளையாட்டுத்தனம் கல்வியுடன் விளையாடிவிட்டது. எந்த அலுவல்களையும் பொறுப்பாகச் செய்யமாட்டான். எல்லாவற்றையுமே விளையாட்டாகத்தான் எடுத்துக் கொள்வான். ஆனாலும் தன்னுடைய நடவடிக்கைகள் மற்றவர்களைப் பாதிக்காதபடி பார்த்துக் கொள்வான்.

இலங்கையிலிருந்து மேற்கு ஜேர்மனிக்கு அரசியல் தஞ்சம் கோரிவந்த ஆரம்ப நாட்களில் தன்னுடைய அறை நண்பர்களான முத்துவுடனும், ஞானத்துடனும் அவன் நெருங்கிப் பழகவில்லை. சில மாதங்களின் பின்தான் அவர்களைப் புரிந்துகொண்டு நெருங்கினான்.

முத்துவுக்கு சித்தப் பிரமையாக்கியபோது பாலகுமார் கலங்கிப் போனான். அடிக்கடி வைத்தியசாலைக்குப் போய் முத்துவைப் பார்த்துக் கொள்ளுவான். ஞானம் ஆரம்பத்தில் அநியாயமாகச் செலவழித்துத் திரிந்தபோது பாலகுமார் அவனைக் கண்டிக்க முயலவில்லை. எல்லோரும் தாங்களே உணர்ந்து திருந்திக்கொள்ள சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்பதுதான் அவனுடைய கொள்கை. தங்கையின் இழப்பின் பின் ஞானம் திருந்தியது அவனுக்கு சந்தோசத்தைக் கொடுத்தது.

ஜூன் மாத வெயில் மழை, குளிர் என்ற பல தடங்கல்களு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டன் ஜேர்மனிக்கு ஆறுதலளித்துக் கொண்டிருந்தது. தொலைக் காட்சிச் சேவைகளில் கோடைகாலத்திற்கென விசேட நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டிருந்தன. உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகிவிட்டன. ரீகன் மொஸ்கோவில் குழந்தைக்குக் கை கொடுத்தார்.

ஒரு பின்நேரம்.

ஞானம், பாலகுமார், கணேசன், வசந்தன் ஆகிய நால்வரும் தரையில் உட்கார்ந்து 'காட்ஸ்' விளையாடிக் கொண்டிருந்தார்கள். வானொலியில் பி.எவ்.பி.எம் பாடல்களைத் தின்றுகொண்டிருந்தது. வெப்பத்தைத் தணிப்பதற்காக ஜன்னல்கள் முற்றாக திறக்கப்பட்டிருந்தன.

"எண்பது"

"மேல"

"நூறு"

கணேசன் துரும்பை மறைத்து வைக்க, மிகுதிச் சீட்டுகளை ஞானம் பிரித்து முடித்தான்.

"இருநூற்றம்பது"

"துலேஞ்சுறு. உன்ரை பிறத்தி என்னட்ட"

"பாப்போம்"

விளையாட்டு சுவாரசியமாக நடந்துகொண்டிருந்தது. எதிர்தரப்பில் 'பிறத்தி' எது என்ற ஆர்வத்தில் இருந்தார்கள். ஒவ்வொரு சீட்டாகப் பறிபோனது.

"கப்ஸ்"

வசந்தன் தன் கையிலிருந்த சீட்டுகளை வரிசைப்படுத்தி அப்படியே வைத்தான். மற்ற இருவரும் சரிபார்த்தபின் ஏற்றுக் கொண்டார்கள்.

அடுத்த ஆட்டம் ஆரம்பமாகும்போது அழைப்புமணி அழைத்தது. அவர்கள் அதை அலட்சியப்படுத்தி விளையாட்டைத் தொடர்ந்தார்கள். அழைப்புமணி தொடர்ந்து அழுது அவர்களைச் சினப்படுத்தவே வசந்தன் அலுப்புடன் எழுந்துபோய் திறந்தான்.

வெளியே மூர்த்தியும் அறிமுகமில்லாத வேறு இரு நபர்களும் நின்றார்கள்.



(இன்னும் வரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்ணை நாம் எப்படியெல்லாம் பாழடித்துக்கொள்கிறோம்!

பல மனிதர்கள் தம் கண்களை எப்படியெல்லாம் பாழடித்துக் கொள்கிறார்கள் என்பதை நினைக்கும்போது வியப்பாக இருக்கும்.

முதலில், செயற்கை ஒளி! பட்டப்பகல் வெளிச்சத்திலும் அலுவலகத்தில், டியூப்லைட் போட்டுக்கொள்ளாமல் வேலை செய்பவர்கள் எத்தனை பேர்? அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வந்ததும் இரவில் விளக்கு வெளிச்சம் இல்லாமல் இருட்டிலா இருக்கப் போகிறார்கள்?

சிலர் தூங்கும்போதுகூட பிரகாசமான விளக்குகளைப் போட்டுக் கொண்டுதான் தூங்குவார்கள். இப்படி இருபத்து நான்கு மணிநேரமும் செயற்கை ஒளியில் ஒரு மனிதன் இருப்பதால் கண்கள் மட்டுமல்ல, அவன் உடல்நலமும் கெட்டு விடுகிறது.

உலகத்திலுள்ள மொத்தக் கண்நோய்களில் நான்கில் ஒரு பங்கினர், தம் கண்களைச் செயற்கையினால் கெடுத்துக்கொள்கின்றனர் என்று ஓர் ஆராய்ச்சி நிறுவனம் கூறுகிறது.

சிலருக்குக் கண்கள் ஒன்றாகத் தெரிந்தாலும்கூட, தமக்கு ஏதோ பார்வைக் கோளாறு இருப்பதாக ஒருவிதப் பிரமையை ஏற்படுத்திக் கொள்வார்கள். இதற்கு மற்றவர்களும் உதவுவார்கள். விளைவு? பகல் பன்னிரண்டு மணி வெளிச்சத்திலும் இவர்களுக்கு லைட் வேண்டும். அது மட்டுமல்ல, இல்லாத தம் 'நோய்க்காக" மருத்துவரிடம் சென்று அவரைக் கட்டாயப்படுத்தி மருந்து வாங்கிக்கொண்டு வருவார்கள். டாக்டர், இவர்கள் கூறும் தவறான விவரங்களின்படிதானே நடக்கவேண்டும்?

கண்களைப் பூப்போலக் காப்பாற்ற வேண்டியதில்லை— .

அவற்றைக் கெடுத்துக் கொள்ளாமலிருந்தால் போதுமானது. சிலருக்குக் கண்ணாடி அணிவது ஒரு ஃபேஷன்.

## இரவற் பகுதி

www.tamilarangam.net

அளவுக்கு அதிகமாகச் சினிமா பார்ப்பதால் கண்கள் இரண்டுவிதமான கெடுதல்களைப் பெறுகின்றன. முதலில், சினிமா ஒளி கண்களைப் பாதிக்கும்; இரண்டாவது, அளவுக்கு மீறிய கார்பன்டையாக்ஸைடு கண்களில் மட்டுமின்றி, இரத்தம் முழுவதும் பரவி! ஆயுளையே குறைத்துவிடும்.

கண்ணாடி அணியக் கூடாது என்று நினைப்பவர்கள் அடியோடு நிறுத்தாவிட்டாலும், சினிமாப் பார்ப்பதைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

சுத்தமே கண்களுக்கு நல்ல பாதுகாப்பு. சிலர் எப்போதும் அழுக்குகளின் கோட்டவுனாக இருப்பார்கள். காலையில் தூங்கி எழுந்ததும் கண்ணிலுள்ள கோழையைக்கூடத் துடைக்காதவர்கள் கண்களை எப்படிப் பாதுகாக்கமுடியும்? கண்ணிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருள் அதே கண்களில் தங்கி, அதுவாக உலர்ந்து உதிரவேண்டும் என்றால், எவ்வளவு கெடுதல்!

சிலருக்கு இயற்கையாக உடல் அமைப்பில் சூடு அதிகமாக இருக்கும் இவர்கள் அடிக்கடி முகத்தைக் குளிர்ந்த நீரினால் கழுவிக்கொள்ளவேண்டும்.

முகத்தைக் கழுவும்போது இரண்டு விரல்களால் இமைகளை நீக்கி (முரட்டுத்தனமாக அல்ல) விழிகளையும் சுத்தம் செய்ய வேண்டும். குறிப்பாக, அசுத்தமான இடங்களுக்கும், தும்பு, தூசி உள்ள இடங்களுக்குப் சென்றுவந்த பிறகு கண்களைச் சுத்தம் செய்துகொள்ளவேண்டும். இதைச் செய்பவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்?

அடுத்ததாக, கண்களைக் கசக்குவது! சிலருக்கு வேலை எதுவும் இல்லாவிட்டால், அவர்களது கைகள் தாமாகக் கண்களை நோக்கிச் செல்லும். கண்களை ஏதாவது விஷமத்திற்குள்ளாக்கிக்கொண்டே இருப்பார்கள்?

மிகவும்
அவசியம்
ஏற்பட்டாலன்றிக்
கண்களைக்
கைகள்
தொடவேக் கூடாது!

சில சமயம் கண்களில் பூச்சிகளும், தும்புகளும் புகுந்து கொள்ளும். சில பூச்சிகள் விழியைக் கடித்துவிடும். உடனே மருந்து போட்டுக்கொள்ளவேண்டும். கண்களில் தூசி தும்பு விழுந்துவிட்டால் சுலபமாக வெளியில் வராது; துன்பம் வேறு! ஆனால்—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்களில் விழும் பொருள்களை வெளியேற்றுவதற்குக் கண்களுக்கே சக்தி உள்ளது. விழுந்த சில நிமிடங்களுக்குள்ளாக அவை இமையின் ஓரமாக வந்துவிடும். இதற்காகக் கண்ணைப் போட்டுக் கசக்கவேண்டியதில்லை; கண்களை ஊதவும் வேண்டாம். ஒரு நிமிடம் பொறுத்துக்கொண்டு, கண்களை மூடிக்கொண்டு, விழிகளை அசைக்காமல் ஒரே நிலையில் வைத்திருங்கள். தூசியோ பூச்சியோ கண்ணீருடன் தானாக வெளியேறிவிடக்கூடும்!

சில சமயம் இமை ஓரங்களில் திளவு எடுக்கும். இமைகளை மூடி லேசாக ஒரு விரலால் பக்கவாட்டில தடவினால் திளவு அடங்கிவிடும். இதே நமைச்சல் தொடர்ந்தால் கண் பாதிக்கப்பட்டுள்ளது என்று அர்த்தம். டாக்டரிடம் சிகிச்சை பெறவேண்டும்.

இலேசான வீக்கமும், எரிச்சலும் ஏற்பட்டால், வெந்நீரத் துணியால் ஒத்தடம் கொடுக்கலாம். சிலர் அப்போதும் கைகளையே பயன்படுத்துவார்கள்.

மற்ற உறுப்புக்கள் வேலை செய்து அலுப்பதைப்போல நம் கண்களும் அலுத்துவிடும். இதை இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டும்.

வேகமாகச் செல்லும் அல்லது இயங்கும் பொருள்களைத் தேவையில்லாமல் ஏன் பார்க்கிறீர்கள்? அவசியமின்றி வெளிச்சம் அதிகமாக உள்ள காட்சிகளை ஏன் பார்க்க வேண்டும்? உங்கள் ஆயுளுடன் கண்களின் ஆயுளும் நீடிக்க வேண்டுமென்றால் கண்களுக்கு அளவோடு வேலை கொடுக்க வேண்டும்.

பார்ப்பது என்றால் கவனிப்பது என்று பொருள் கொள்ளலாம். அனாவசியமான சங்கதிகளில் கவனம் செலுத்தாதீர்கள். கண்களுக்கு வேலை குறையும்.

**தூக்கமும் கண்களும்**

உடலுக்குக் காற்று, உணவு, தண்ணீர் ஆகியவை எப்படி முக்கியமோ அப்படியே தூக்கமும் முக்கியம்.

ஆனால் அளவுடன் தூங்கவேண்டும். அளவுக்கதிகமாகத் தூங்கினால் தலை பாரமாக இருக்கும்; கண்களில் எரிச்சல் உண்டாகும்; தலைவலியும் ஏற்படும். இப் பழக்கம் தொடர்ந்து நீடித்தால் கண்ணாடி போட்டுக்கொள்ளவேண்டியதுதான்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒவ்வொரு நாளும் சராசரியாக எட்டு மணி நேரம்தான் தூங்கவேண்டும். பகலில் ஒய்வு என்ற பெயரில் ஒரு மணி நேரம் கண்களை மூடி அரைத் தூக்கத்தில் ஈடுபடலாம்.

அளவோடு தூங்குவதால் கண்களுக்கும், மற்ற உடல் பகுதிகளுக்கும் மனத்திற்கும் ஓய்வு! நம் உடலில் சேர்ந்திருக்கும் அதிகப்படியான கார்பன்டைஆக்ஸைடு தூங்கும்போது விடும் ஆழ்ந்த சுவாசத்தின்மூலம் வெளியேறுகிறது. தூங்கி எழுந்திருக்கும்போது இரத்தம் புதுப்பிக்கப்பட்டு உற்சாகமாக இருக்கும். மீண்டும் அன்றாட அலுவல்களைக் கவனிப்பதற்கான பலம் ஏற்படும்.

அளவுடன் தூங்கினால்தான் மனத்திற்கும் தெம்பாக இருக்கும்.

குறிப்பிட்ட சமயத்தில் படுக்கைக்குச் சென்று குறிப்பிட்ட நேரத்தில் எழுந்துவிடவேண்டும். நினைத்த நேரத்திலெல்லாம் தூங்கக்கூடாது.

தூங்கச் செல்லும்போது மனத்தைப் போட்டுக் குழப்பிக்கொள்ளக்கூடாது. எத்தனைக் கவலைகள் இருந்தாலும் அவற்றை மறந்துவிட்டு நாகரிகமாகப் படுத்துத் தூங்கவேண்டும். சிலர் கவிழ்ந்து படுத்துக்கொண்டு விழிகளைத் தலையணையில் அழுத்திக்கொண்டு தூங்குவார்கள். இது தவறு. தூங்கும்போது விழிகள் எதிலும் படக்கூடாது. இப்படி விழிகளை அழுத்தினால் சீக்கிரம் கோளாறு ஏற்படும். தலைவலியும் வரும்.

சுத்தமான படுக்கையில் காற்றோட்டமான அறையில் தூங்குவது கண்கள் உட்பட உடல் முழுவதற்கும் நல்லது.

கண்களில் ஏதாவது ஒரு காரணத்தால் நீர் வடிவதுண்டு. இதற்காக எப்போதும் கைவசம் ஒரு சுத்தமான கைக்குட்டையை வைத்திருப்பது நல்லது. கண்ணீரைத் துடைப்பதற்கு மட்டுமின்றி, கண்களுக்கு இதமாக ஒற்றிக் கொள்ளவும் முடியும் குறிப்பாக உஷ்ணமும், அசுத்தமும் நிறைந்த இடங்களில் வசிப்பவர்கள் எப்போதும் கைக்குட்டை வைத்திருக்கவேண்டும்.

கண்களைச் சுத்தமான நீரினால் கழுவுவதைத் தவிர, கண்களுக்கு எண்ணெய் போடுவது, டாக்டரின் அனுமதியின்றி கண்ட மருந்தைப் போடுவது ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். குளிக்கும்போதும், எண்ணெய் ஸ்நானம் செய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யும்போதும் கண்களை இறுக்கமாக மூடிக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் சோப்பு, சீயக்காய்த்தூள் ஆகியவை விழி களைத் தாக்கும்; இது கெடுதல்.

எண்ணெய் தேய்த்துக்கொண்டபிறகு நல்ல தூக்கம் வரும். தூங்கக்கூடாது. அப்படித் தூங்கினுல், எண்ணெய் தேய்த்துக்கொண்ட பயன் கிடைக்காததுடன், கண்களில் வீக்கம் ஏற்படும். மற்ற தொல்லைகளும் உண்டாகும்.

படிப்பதற்கும் சில விதிமுறைகள் உள்ளன. குறிப்பாகச் சிறிய எழுத்துக்களைப் படிக்கும்போது இவ்விதிகளை அனுசரிக்க வேண்டும். புத்தகத்தை வெகு அருகிலோ அல்லது வெகு தூரத்திலோ வைத்துப் படிக்கக்கூடாது. மிகவும் மங்கலான வெளிச்சத்திலோ அல்லது அதிகமான வெளிச்சத்திலோ படிக்கக்கூடாது.

நோய்வாய்ப்பட்டிருக்கும்போது படிக்கக்கூடாது.

தூங்கவேண்டிய நேரத்தில் படிக்கக்கூடாது.

அசதியுடன் படிக்கக்கூடாது.

எழுத்துகள் மங்கலாக இருந்தால் கண்களைச் சுருக்கிக் கொண்டு படிக்கவேண்டும். ஆகவே, பளிச்சென்ற எழுத் துகளையே படிக்கவேண்டும். ஒளியைப் பிரதிபலிக்கக்கூடிய பளபளப்பான காகிதங்களிலுள்ள எழுத்துகளைப் படிப் பதும் கண்களுக்கு அதிகச் சிரமத்தை உண்டாக்கும். பஸ், இரயில் முதலியவற்றில் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் போதும் எதையும் படிக்கக்கூடாது.

படுத்துக்கொண்டே படிக்கக் கூடாது. முறையாக உட்கார்ந்து படிக்கவேண்டும். அதிகமாகச் சாயாமல், நேராக உட்கார்ந்து தோள்களையும் கைகளையும் விறைப்பாக வைக் காமல் புத்தகத்தை முன்பு கூறியபடியே படிக்கவேண்டும்.

கூடுமானவரை குனியாமல் தலையை நேராக வைத்துப் படிக்கவேண்டும். தலையைக் குனிந்தவாறு படித்தால் கழுத் திலும் தோளிலுமுள்ள தசைகளும் நரம்புகளும் இழுக்கப் பட்டு அதனுல தலைக்கு வேண்டிய இரத்த ஓட்டம் செல்லாது. இதனுல் கண்களில் நல்ல வலி உண்டாகும.

வேகமாகக் கண்களை ஓட்டிப் படிக்கக்கூடாது. நிதான மாக ஒவ்வொரு சொல்லாகப் படிக்கவேண்டும்.

கண் இமைகளைப் பெரும்பாலும் மூடினுற்போல் படிப்பது நல்லது. ஏனெனுல் கண் விழிகள் ஓரளவு தாழ்ந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருப்பதால் இமைகளைத் தாழ்த்திவைப்பது எளிதாக இருக்கும். இந்த முறையினால் அனாவசியமான ஒளி விழிகளைத் தாக்காது. தேவையான ஒளியைமட்டும் இமைகள் அனுமதி செய்யும். படிக்கும்போதும் எழுதும்போதும் கண்களை அடிக்கடி சிமிட்டாமல், குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை சிமிட்டவேண்டும். அடிக்கடி சிமிட்டிக்கொண்டே படித்தால் கண்கள் சீக்கிரம் சோர்வு அடைந்துவிடும்.

கண்ணாடியின்றிச் சிறந்த
கண் பார்வை பெறுங்கள்

மணிமேகலைப் பிரசுர
ஆசிரியர் குழு

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண்: 1447
4, தணிகாசலம் செட்டி ரோடு,
தியாகராய நகர்,
சென்னை-600 017
போன்: 442926

---

ஆண்டிலில் சிறுவர் பகுதியைச் சேர்த்துக் கொண்டால் சிறுவர்களுக்கும் பயனுள்ளதாயிருக்கும். 'நான் படித்துச் சுவைத்தவை' என்ற அங்கத்தைச் சேர்த்துக் கொள்வீர்களா?. 'குறுக்கெழுத்துப் போட்டி' என்ற ஆக்கத்தை தயாரித்து அனுப்பலாமா?

டோற்முண்ட் — திருமதி விக்னபாக்கியநாதன்

உங்கள் ஆலோசனைக்கு நன்றிகள். உங்களைப் போலத்தான் நாங்களும் கூடுதலான அம்சங்களைச் சேர்த்துக் கொள்ளவே விரும்புகின்றோம். ஆனால் 40 பக்கங்களுக்குள் அனைத்து விடயங்களையும் அடக்க முடியவில்லை. குறிக்கப்பட்ட வாசகர் தொகையுடன் எங்களால் பக்கங்களை அதிகரிக்க முடியாமலிருக்கிறது. வாசகர் வட்டம் பெரிதாகி, அதனால் பக்கங்கள் அதிகரிக்கும்போதுதான் மேலும் புதிய அம்சங்களைச் சேர்த்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். போட்டிகளைவிட முக்கியமான விடயங்கள் பல இருப்பதால் குறுக்கெழுத்துப் போட்டியைச் சேர்த்துக்கொள்ள நாம் விரும்பவில்லை.

— கடலோடிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கடல்: 1    ஜூன் 1988    கலம்: 6

ஆசிரியர் குழு.......... கடலோடிகள்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்கு பொறுப்பாளிகள்.

வெளியீடு............. தென்னாசிய நிறுவனம்

முகவரி................ SÜDASIEN BÜRO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL-2
WEST GERMANY.
TEL. 0202-507156

டாக்டஸ்

உங்களை ஒருவர் விமரிசித்தால் எரிச்சல் வருகிறதா?
அப்படியானால் அந்த விமரிசனம் சரியானதுதான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

(மாத சஞ்சிகை)

தூண்டிலைக் கிரமமாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

| | | |
|---|---|---|
| 6 மாதங்கள் | - | 20 டி.எம். |
| 1 வருடம் | - | 38 டி.எம். |


மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு 2 டி.எம். மேலதிகமாகும்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

வங்கி கணக்கு இல. 268540
STADT SPARKASSE WUPPERTAL

BLZ 330 500 00.

# SÜDASIEN BÜRO




KIEFERNSTR. 45
5600 WUPPERTAL · 2
WEST GERMANY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்